Published by oodaru
switzerland
udaru@bluewin.ch
www.oodaru.com
http://udaru.blogdrive.com

கவிதைத் தொகுப்பு

2007

# இசை பிழியப்பட்ட வீணை




மலையகக் கவிஞைகளின் படைப்புகள்

ஊடறு வெளியீடு

*Isai Piliyappadda Veenai*
*Collection of Poems by 47 Poets*
*- Malayaga Women's Writings -*
© *poets*

*Published on*
*September 2007*

*Published & Compiled by*
*Ranji (Swiss)*
*Theva (Germany)*
*email : udaru@bluewin.ch*

*Layout & cover designed by*
*Ravi & Ranji (swiss)*

*Printed at*
*Jothy Enterprises*
*Chennai - 600 005*

*Distribution in Srianka*
*V.Thinakaran*
*Kelliewatte*
*Patana*
*Srilanka*

*Distribution in India*
*Vidiyal Pathippagam*
*11, Periyar Nagar*
*Masakkalipalayam (North)*
*Coimbatore 641 015*
*email: sivavitiyal@yahoo.co.in*

# இசை பிழியப்பட்ட வீணை

கவிதை நூல்
2007
ஊடறு வெளியீடு

## கவிஞைகள்

பாலரஞ்சனி ஜெயபால்
சந்திரலேகா கிங்ஸ்லி
மஞ்சுளா
மரியா என்டனீட்டா
எஸ்தர் லோகநாதன்
இஸ்மாலிகா
புனிதகலா
இரா.தேவிகா
பொ.கீதாகௌரி,
எஸ்.கலைச்செல்வி
க.கவிதா
மீனாள் செல்வன்
மலைமதி
காஞ்சனா
மணிமேகலா செல்லத்துரை
புனிதகலா, சு.பிரேமராணி
ஜி.ஷர்மிளா, ஜே.அன்னால் குளோரி
எம்.புனிதகுமாரி, எஸ்.சர்மிளா
சே.மேரிதெபோராள், ஜெ.ரெஜினா
எஸ்.விஜயபாரதி, ஆர்.பூங்கொடி
அ.பரமேஸ்வரி, பூங்கொடி இராமையா,
சி.சாரதாம்பாள், சாந்தி மோகன்
மா.மோகனா, சூர்ப்பனகை, ஜெ.வித்தியாதர்சினி
தி.சுபந்தினி, பெ.சசிகலா, வே.சசிகலா, ஆர்.சரஸ்வதி
தினமணி தங்கையா, விழி, சு.உஷாநந்தினி, கு.விஜிதா
ரா.ஸ்ரீபிரியா, யோகேஸ்வரி கிருஸ்ணன், இரா.வனிதா,
ரா.கெத்தரீன், க.நளாயினி, ஆர்த்தி, பி.ஜேசுராணி



## முகவுரை

எது கவிதை? எனும் கேள்விக்கு ஒவ்வொரு கோட்பாடும் ஒவ்வொரு வரைவிலக்கணங்களைக் கூறமுடியும். எனினும் மலையகத்துக்கு பொருத்தமான கவிதை வடிவங்கள் எவை என்றால் இங்குள்ள கவிதை வடிவங்களையும் முன்மொழிய முடியும். தமது இலக்கு வாசகர்களை எளிதில் சென்றடையும் நோக்கில் படைக்கப்பட்டுள்ள இக் கவிதைகள் எவ்வித கவிதா மேதாவிலாச விமர்சனங்களையும் பொருட்படுத்தாது பயணிக்கின்றன என்பதை வாசகர் உணர்வர்

உள்ளங்கையில் தொலைபேசியுடன் மனித குலம் இன்னும் தனித்தனி அலகுகளாக சிதைந்து போயுள்ள ''வளர்ச்சியடைந்த நாகரீக சூழலில்'' எங்கோ இருக்கும் யாருக்காகவோ வேறு எங்கோ வாழும் யாரோ சிந்திப்பதையும் செயல்படுவதையும் காணும் வேளைகளில்தான் மானுடத்தின் ஈரம் மனித வாழ்க்கையோடு ஒட்டியிருப்பதை சிறு ஆறுதலோடு உணர முடிகிறது. சுவிஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் ஊடறு பெண்கள் அமைப்பின் இணைய சஞ்சிகையான ஊடறுவின் ஆசிரியர் றஞ்சியுடனான தொடர்பு இத்தகைய ஆறுதல் தந்தது. இலங்கை தேசிய தொலைக்காட்சி EYE அலைவரிசையின் 4வது பரிமாணம் நிகழ்ச்சித் தயாரிப்பாளர் jafir (என்.ஆத்மா) ஊடாக இத் தொடர்பு கிடைத்தது. றஞ்சி என்னோடு தொலைபேசியில் தொடர்புகொண்டு இலங்கை மலையகப் பெண்களின் கவிதைகளை தொகுத்து வெளியிடும் தனது ஆர்வம் பற்றி சொன்னபோது அதனை மறுப்பது இழப்பென ஏற்றுக் கொண்டேன்.

இலங்கை மலையகத்தில் எழுத்துப்பதிப்பு முயற்சிகள் அருகிப்போன காலகட்டத்தில் மிக அருகிப்போன பெண் எழுத்துகட்கு களமைக்கும் முயற்சிக்கு அம்மண்ணை சார்ந்தவன் என்ற சுயநலத்துடன் கூடிய ஆர்வத்தின் உந்துதலால் உதவவேண்டிய பொறுப்பை கனமாக உணர முடிந்தது.

பிஜிதீவு உட்பட்ட நாடுகளுக்கு தென்னிந்திய மக்கள் கூலிகளாக இடம்பெயர்ந்த காலத்திலேயே இலங்கைக்கும் இடம்பெயர்ந்தனர். இவர்களே இன்றைய மலையக மக்கள் எனப்படும் மக்கள் கூட்டமாவர். கண்ணற்ற தீவின் கரும்புத்தோட்டப் பெண்களுக்காக அழுத பாரதி, தெரியும் தூரத்திலிருந்த தேயிலைத் தோட்டப் பெண்கள் பற்றிப் பாடாது போனதாலோ என்னவோ இம்மக்களைப் பற்றி வெளிநாட்டுத் தமிழர் வினவாமல் இருந்துவிட்டனர். ஈழத் தமிழர்கள் என்பவர்கள் 'தமீழீழத்' தமிழர்களாக மட்டுமே உலக விழிகளில் காட்சிதருவது நாம் காணும் நிஜமாக உள்ளது.

உலகளாவிய ரீதியில் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் பெண்களின் ஒரு கூறான மலையகப் பெருந்தோட்டத்துறை கலாச்சார பண்பாட்டு அடையாளங்களுக்குள் தம் உணர்வுகளின் நேர்மையை மறைத்து, மனித உரிமை மறுப்புக்கு உள்ளாகி, ஆணாதிக்க ஒடுக்குமுறைகளை மனதுள்ளும் கொழுந்துக்கூடைச் சுமையை முதுகிலும் குடும்பச் சுமையை தலையிலும் சுமந்தபடி வாழ்க்கையை வாழ்கின்றனர். பிறவி உழைப்பாளர்களாக தமைக் கருதிக்கொண்டு வீட்டுக்குள்ளும் வெளியிலும் வேலை, உழைப்பு, வேலை என்னும் நிரந்தர நிர்ப்பந்தத்தை தம்மீது பணித்துக் கொண்டு குறைந்த கூலியிலும் கூலியில்லாமலும் வியர்வை சிந்துகின்றனர். முழு உலகிலும் உழைக்கும் பெண் சமூகங்களிலிருந்தும் வேறுபட்ட சமூகப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர்.

> **பிறவி உழைப்பாளர்களாக தமைக் கருதிக்கொண்டு வீட்டுக்குள்ளும் வெளியிலும் வேலை, உழைப்பு, வேலை என்னும் நிரந்தர நிர்ப்பந்தத்தை தம்மீது பணித்துக் கொண்டு குறைந்த கூலியிலும் கூலியில்லாமையிலும் வியர்வை சிந்துகின்றனர். முழு உலகிலும் உழைக்கும் பெண் சமூகங்களிலிருந்தும் வேறுபட்ட சமூகப்பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர்**

உடல்சார் அடையாளங்களுக்காக பெண்ணானவள் உடல், உள, பொருளாதார ரீதியில் சுரண்டப்படுவதற்கும், ஒடுக்கப்படுவதற்கும் எதிரான குரலை உயர்த்துவதற்கும் ஏன், தனது பிரச்சினைகளை தனக்குத் தானே கூறிக்கொள்வதற்கும் கூட தைரியமற்றவளாக மாற்றப்பட்டமைக்கும் சமூகம் தனது கணிசமான பங்களிப்பைச் செய்து வந்துள்ளது. இந் நிலைமை கற்ற சமூகத்திடையே சற்று தளர்வடைந்து வந்திருப்பதும், வருவதும் சிறு ஆறுதல் தருகின்றது.

இத்தகைய ஒரு பெண்ணிலைச் சூழலில் பிறந்து வளரும், வாழும் படித்த பெண்களும் விரும்பியோ விரும்பாமலோ குறித்த வாழ்நிலைக்குள் வந்து விழ நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். படித்த பெண்களின் எழுத்துக்களில் கூட எம் மரபுக் கலாச்சாரத்துக்கு, எதிர்க்கலாச்சாரக் கருத்துக்கள் எழுந்து வருவது அரிதாக உள்ளமை நாம் எதிர்பாராதது அல்ல. மலையகத்தில் பெண்ணியச் சிந்தனைகள் உயர்கல்வி நிறுவனங்களில் தீவிரமாகப் பேசப்படுகின்றன. கல்விக்காலம், பயிற்சிக்காலம் என்பன முடிந்து வெளியேறிய பெண்கள் தனித்தனியாக்கப்பட்டதன் பின் அவர்களிடையே ஓர் இணைப்பு அல்லது வலைப்பின்னலின்மை பிரதான குறைபாடாகி விடுகிறது. கம்யூனிச சிந்தனையை முன்னெடுக்கும் ஒரு சில அரசியல் கட்சிகளிடையே இப்பணி ஆற்றப்படினும் பெண்களின் அங்கத்துவக் குறைவு பெரும் சவாலாக உள்ளது. இலக்கியம் தொடர்பான கருத்தியல்களோ, வரைவிலக்கணங்களோ கருத்துருவாக்கங்களின் இலக்கியக் கொள்கை, அரசியல், மொழிப்புலமை போன்ற காரணிகளால் ஒன்றுக்கொன்று வேறுபடலாம். எனினும் இவை மெல்லுணர்வுகளின் அதிர்வில் பிறப்பவை எனும் கருத்தில் முரண்பாடு இருக்க முடியாது. இதில் கவிதைக்கு பெரும்பகுதி பொருந்தும்.

இத் தொகுதியில் இடம்பெறும் பெரும்பாலான கவிதைகளில் மெல்லிய உணர்வலைகளை தரிசிக்க வாசகர் இடர்ப்படலாம். மலையக மக்களின் வாழ்வியலில் மேலெழும் எல்லாவித துன்பங்களுக்கும் பொருளாதாரமே அடிப்படையாய் உள்ளது. எனவே மக்களைப் பாடும் இலக்கியங்களில் வர்க்கப்பார்வை வெளிப்படுவது தவிர்க்க முடியாதாகிறது. ஆளும் வர்க்கம் என்பது இங்கு அரசியல் தலைவர்களாகவும் முதலாளிமார்களாகவும் ஒருசேர இருக்கும் நிலையில் ஆளப்படுவோர் அடக்கப்படுபவர்களாக பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகின்றனர். கல்வி, சுகாதாரம், வீடு சம்பளம் என அனைத்தையும் போராடிப் பெறவேண்டிய ஒரு சூழலில் பிறக்கும் இலக்கியம் தமை அடக்கும் சக்திகளுக்கெதிராக போர்க்கொடி உயர்த்துவது அவசியமானதாகிறது. இந்தத் தன்மையின் நீட்சியாகவே இத் தொகுதியில் இடம்பெறும் கவிதைகளை காணமுடிகிறது.

இக் கவிதைகளில் பிரச்சார நெடி சற்று தூக்கலாக இருப்பதையும் குறியீடு, படிமம் போன்ற உத்திகள் கண்டுகொள்ளப்படாமல் இருப்பதையும் காணமுடியும். எது கவிதை? எனும் கேள்விக்கு ஒவ்வொரு கோட்பாடும் ஒவ்வொரு வரைவிலக்கணங்களைக் கூறமுடியும். எனினும் மலையகத்துக்குப் பொருத்தமான கவிதை வடிவங்கள் எவை என்றால் இங்குள்ள கவிதை வடிவங்களையும் முன்மொழிய முடியும். தமது இலக்கு வாசகர்களை எளிதில் சென்றடையும் நோக்கில் படைக்கப்பட்டுள்ளதான இக் கவிதைகள் எவ்வித கவிதா மேதாவிலாச விமர்சனங்களையும் பொருட்படுத்தாது பயணிக்கின்றன என்பதை வாசகர் உணர்வர்.

எனது கருத்துக்கள் வெறுமனே இக் கவிஞர்களை மிகைப்புகழ்ச்சி செய்யவோ, நான் ஏலவே குறிப்பிட்ட எனது சுயநலத்தின் பாற்பட்டது எனவோ எண்ணத் தேவையில்லை. மலையக இலக்கியத்தோடும் தற்கால வாசகர்களோடும் ஓரளவு பரிச்சயம் உள்ளவன் என்ற வகையில் என்னளவில் நான் உணரும் உண்மைகளே இவை. எனினும் இவைதான் மலையக இலக்கியம் எனும் தவறான முடிவுக்கு எவரும் வருவதை அனுமதிக்கமாட்டேன்.

பெண்ணியச் சிந்தனைகள் மீதான ஆண்வர்க்கத்தின் பயம் ஆர்முடுகலில் செல்வதற்கும் எதிர்க்கலாச்சார அச்சத் திற்கும் எம் மரபுவழி கலாச்சார அம்சங்களில் சில தீனிபோடுகின்றன. பெண்ணியம் பேசும் சில –NGO க்களில் பணிபுரியும்- யுவதிகளின் கட்டுப்பாடற்ற 'சுதந்திரங்கள்' சாமரம் வீசுறுகின்றன. இவ்வமைப்புக்களின் பிரச்சாரம் பெண் களுக்கு தனியே வீட்டுக்குள்ளும் வெளியிலும் தைரியத்தை வழங்க முன்வரும் அதேவேளை, பெண்களி டையே உள்ள சாதியக் கட்டுமானத்தை உடைக்கவோ, உழைக்கும் வர்க்கக் குணாம்சத்தை வளர்க்கவோ ஆர்வம் காட்டுவதில்லை. இந்நிலை தொடரும் பட்சத்தில் தூய நோக்கோடு இயங்கும் சில பெண்கள் அமைப்புகளையும் மக்கள் இனங்காண முயலாத துரதிஸ்டத்திற்கு முகங்கொடுக்கும் நிலை ஏற்படும்.

**கண்ணற்ற தீவின் கரும்புத்தோட்டப் பெண்களுக்காக அழுத பாரதி, தெரியும் தூரத்திலிருந்த தேயிலைத் தோட்டப் பெண்கள் பற்றிப் பாடாது போனதாலோ என்னவோ இம்மக்களைப் பற்றி வெளிநாட்டுத் தமிழர் வினவாமல் இருந்துவிட்டனர். ஈழத் தமிழர்கள் என்பவர்கள் 'தமீழீழத்' தமிழர்களாக மட்டுமே உலக விழிகளில் காட்சிதருவது நாம் காணும் நிஜமாக உள்ளது.**



எனவே இத்தகைய அமைப்புக்கள் மக்களின் உளவியலை முதலில் புரிந்து கொள்வது அவசியமானதாகும். நாட்டுக்கு நாடு பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபடும் பெண்களின் பிரச்சினைகளை துல்லியமாக இனங்காண்பதும், பெண்ணியச் சிந்தனைகளில் ஆர்வம் காட்டும் அனைவரையும் இணைத்துக்கொண்டு இயங்குவதும், உயர்கல்வி நிறுவன பெண்களிடையே, பெண்கள் அமைப்புக்களிடையே ஓர் வலைப்பின்னலை உருவாக்கி பேணுவதும் இயங்குவதும் பயனளிக்கும். குறிப்பாக உழைக்கும் தமிழ், முஸ்லிம், சிங்கள பெண்களிடையே இக் கருத்துக்களை விவாதிப்பதற்கும் முன்னெடுப்பதற்கும் முனைய வேண்டும். அதனை பல்வேறு வடிவங்களில் செய்ய முடியும். அவ்வகையில் இலக்கியமும் தனது செறிவான பங்களிப்பை வழங்க வேண்டியது நிகழ்நாட்களின் தேவையாகும்.

மலையக எழுத்து முயற்சிகளை அன்டனிஜீவா போன்றோர் முன்னெடுத்துள்ளனர். இந்த இடத்தில் 1935 களில் தொழிற்சங்க ரீதியில் இம்மக்களுக்காகப் பாடுபட்ட மீனாட்சியம்மையை நாம் பெருமதிப்புடன் நினைவுகூர வேண்டும். இவரே மலையக பெண்களுக்காக குரல் கொடுத்த முதல் தமிழ்ப் பெண்மணி.

இத் தொகுதியில் இடம் பெற்ற கவிதைகள் கலையருவி 2000, தேட்டம் 2000, வடம், புதியபூமி, தாயகம், லயம், அகல், சக்தி (நோர்வே) போன்ற இலக்கிய இதழ்களில் இருந்தும் பெறப்பட்டுள்ளன. இவ்விதழ்களுக்கு நன்றிகள். 'இசை பிழியப்பட்ட வீணை' இல் இடம்பெற்றுள்ள கவிதைகளின் இறுக்கத் தளர்வுகளும், கூர்மை குறைந்த பார்வையும் பொதுவான இலட்சணங்களாயுள்ளன. ஊடறு போன்ற அமைப்புகளின் களவழங்குகை களும், படைப்பாளிகளின் ஈடுபாட்டுடன் கூடிய தொடர்ச்சியான வாசிப்பும், பங்களிப்பும் எதிர்நாட்களில் மலையகப் பெண் எழுத்துகளின் வலுநிலையை நிலைநிறுத்தும் என எதிர்பார்க்க முடியும். 'இசை பிழியப்பட்ட வீணை' மலையகப் பெண் படைப்பாளிகளுக்கு புதிய உற்சாகம் அளிக்கும் என்பது எம் நம்பிக்கை. இந் நூலுக்கான றஞ்சியின் உழைப்பை மதிக்கிறேன். ஊடறுவின் பணி தொடர வாழ்த்துக்கள்!


தோழமையுடன்
வே. தினகரன்

## நினைவு

### மீனாட்சியம்மை

1935 களில் தொழிற்சங்க ரீதியில் இம் மக்களுக்காகப் பாடுபட்ட மீனாட்சியம்மையை நாம் பெருமதிப்புடன் நினைவு கூற வேண்டும். இவரே மலையகப் பெண்களுக்காக குரல்கொடுத்த முதல் தமிழ்ப் பெண்மணி.





# ஒரு அதிகாலைப்போதின் ரம்ய மூச்சு!

காலைக் கதிரவன்
பொன்னாய் உலகை உருக்க
பார்த்தவிடமெல்லாம் தகதகப்பு

புட்களின் சந்தோசக் கூக்குரல்
விடியலை நோக்கி வரவேற்புப் பாட
அதோ அந்த மரக்கிளையில்
அழகாய் சின்னதாய்
ஒரு தூக்கணாங்குருவிக் கூடு

இரை தேடித்தரும் தாயும்
இரத்தமாய் வாய்திறந்து
இரை வாங்கும் குருவிக் குஞ்சு

வாழ்வின் தாற்பரியம் கண்டு
உருகிப் போனதென் மனசு

அழகில் லயித்து
ரசனையில் ஊறி
கற்பனையில் மிதந்து
எங்கோ சஞ்சரித்தபடி
பாடசாலை சென்றடைந்த போது...

எனை ஆழ்ந்த மௌனமாய்
வரவேற்றது ரெட்லைன்!!

பாலரஞ்சனி ஜெயபால்
மாத்தளை

# கற்கள் - கவண்கள் - தாவீது

உயர உயர தெரிகின்ற மாசை
ஒவ்வொரு தடவையும்
அழிக்க முற்படுகின்றேன்
மீண்டும் மீண்டும்
பற்றிக் கொண்டது என்னவோ
இனத்துவேசம் தான்
கொடுர மரணங்கள்
மனிதாபிமானத்தைத் தின்று குவித்த
கொலைகள்
வாழ்வு தர கையேந்தி
வாழ்வை அழித்த அக்கிரமங்கள்
துடிக்க துடிக்க கிழித்துப் போட்ட
மனித உயிர்கள்...
எல்லாம் எமக்குப் போதிப்பது என்னவோ
'நீ இரண்டாந்தரம்' என்றுதான்.

மூச்சு முட்ட முட்ட
உழைப்பை உறிஞ்சிவிட்டு
நான் இந்த பூமிக்கு
அந்நியமானவன் என
அக்கிரம போர்க்கோஷமிட நீ
பூமியின் அவதாரமில்லையே..?
பிறந்தவன் மட்டும்தான்.

உன்னைப் போலவே
அச்சுறுத்தும் உன் இயந்திரங்களை விட
அச்சம் விரட்டும் இயற்கை
எனக்கு அரணும் கோட்டையும்!
உனக்கு படுத்து ஒதுங்க
ஆறடிக்கு மேல் தேவை



எனக்கு பாதுகாப்பாய் வாழ
சதுர அடிகூட அதிகம்தான்!
தாவீதுக்கு கவணும் கற்களும்தான்
வீர கவசம்
குறிஞ்சியின் தாவீதுகளுக்கும்!

இறைவன் அதைத்தான் ரட்சித்தானோ!
துவேஷப்படப் பிறந்த
இனமென்று உண்டா
இருக்க இயல்பில்லை!
எல்லா இனமும் மனுக்குலம்
மகிமைப்பவையே!
எனது நிலம் எனது மொழி
எனது இனம் எனது குருதி யாவும்
மாசுபடுகிறதெனில்
மரணம் எனக்கு
மரியாதைக்குரிய வரப்பிரசாதம்!

தோழா
இன்னும் கற்களைப் பொறுக்கு
கவண்கள் உற்பத்தி செய்
குருதி சொட்டச் சொட்ட
துடைத்து நடந்து வரும்
தலைமைக்கு தலைவணங்கு!
மீண்டும் பற்றிக் கொள்ளுமுன்
கால் நடையாக
பயணத்தை தொடங்கு
கவச வாகனங்களை கண்ணீர் புகையை
கற்களால் வீழ்த்து!

இன்னும் கற்களைப் பொறுக்கு
கவண்களை உற்பத்தி செய்!

சந்திரலேகா கிங்ஸ்லி
கொட்டக்கலை

## சவால்

வறுமையே தலையெழுத்தாகிப் போன
மலையகத்துக்கு
நான் மட்டும் என்ன விதிவிலக்கா?
திரவியம் தேட
போகத் தயாரானேன் மத்திய கிழக்குக்கு
கொழும்பின் நிறமே தெரியாத எனக்கு
அரபு நாடுகளின் நிறம் எவ்வாறு
தெரியப்போகின்றது
எனக்குள் இருந்த எனது
மூன்றாவது கையான நம்பிக்கை
என்னை வழிநடத்தியது
சென்றேன்
வழியில் ஏதாவது என்றால்
திரும்பி வரவும் தெரியாது
சென்றேன்
எனது நம்பிக்கை என்னை
வழிநடத்தியது
சவால்களுக்கு மத்தியில்
உழைத்தேன்
திரும்பி வரும் வழியில்
எனக்கேற்ற துணை ஒன்றையும்
தேடிக்கொண்டேன்
சவால்களுக்கு மத்தியில் இணைந்து
வாழ்ந்து கொண்டிருக்கும் எமது
வறுமையின் நிறம்
இன்னும்
கடுமையாகிக் கொண்டே இருக்கிறது

மஞ்சுளா





## உள்ளதை எழுதச் சொல்கிறது உள்மனது

ஆயுத முனையில் நின்று
சமாதானப் பேச்சுவார்த்தை
புரியும் அரசியல்வாதியோடு
அரசியலும் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

பக்கத்திருப்பவன் வலியை
அறிந்து கொள்ள முடியாதவன்,
எங்கோ துடித்துக் கொண்டிருக்கும்
சமூகத்திற்கு சன்மானம் கொடுக்கிறான், தன்
பெயர் பிரபல்யத்திற்கு.
என்னவென்பது
உள்ளதை எழுதச் சொல்கிறது உள்மனது.

கண்களுக்கே பார்க்கத்
தகுதியற்றதை தன்
வாழ்விற்குச் சொந்தமாக்கிக்கொள்ள
துடிக்கிறான் விகாரமானவன்.

பணத்திற்காய் சிலவேளை மண்டியிட்டு
பல நேரங்களில் தண்டிக்கப்பட்டும்
கொண்டிருக்கிறான் ஏழ்மையாளன்.

உதட்டளவில் சிரித்தபடியே
உள்ளத்தில் விஷங்களைச் சேகரித்து
சமிபாட்டை சிறப்பாய் செய்து கொண்டிருக்கிறான்
துரோகத்திற்குரியவன்
உள்ளதையெழுதச் சொல்கிறது உள்மனது!

நா.மரியா என்டனீட்டா
நாவலப்பிட்டி

# ஒளிந்திருக்கும் தேவதையின் கதை

மிகுந்த உற்சாகத்துடன்
உலகத்தையே நிராகரித்துவிட்டு
எல்லைகளில்
பெய்துவிட்டுப் போனது
அதிசய மழையொன்று.

மழைப்பயணங்கள்
விரும்பும் காலங்கள்
மரம்தரும் வெள்ளிநாணயம்
தலை துவட்டிய பறவை
மறந்து (விட்டும்) போகும்
இறகொன்று
கவி எழுத வைத்துக் கொள் என்று
இப்படி இப்படி எத்துணை எத்துணை?

எல்லையற்ற அத்துவானங்களில்
அலைந்து சுகிக்கும் ஐந்தடி உடல்
பிரக்ஞையற்று
இன்னும் அறியவில்லை நான்
கௌரவத்தின் தாழ்வாரத்தில்
தாஜ்மகால் செதுக்கியுள்ளதை.
தாழ்வாரங்களில் குடியிருக்க
நான் ஒன்றும்
மும்தாஜ் அல்லவே..!

இரவுகளில் து(ா)க்கங்களை
விழுங்கிவிடும்
நிர்சலன யாத்திரையில்
கதவை முட்டும் பிரியங்கள்
(முன்னொரு பொழுதில்)







தேவதைக் கூட்டம் விடியும் வரை
சாமரம் வீசும்

விருப்பமில்லா என் விடுமுறையில்
ஏழையூர் விரையும் நாளில்
கசிந்துருகி ஓடிக்கொண்டே
இருக்கும்
நதியெல்லாம்!

எஸ்தர் லோகநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# மழை நனைத்த கவிதைகளில்

வா...!
மழைக்காலங்களில் உனக்கு
வரம் தருவதாய் கோடையின்
சாபத்தை தவமிருந்து
கொல்கிறேன்
தலை துவட்டிய முந்தானையை
வானம் இரவல் கேட்கும்,
வானவில் ஒன்று
ஜன்னல் தட்டும்

சாவுவீட்டு பத்தி வாசனையாய்
மழைநாள் நேசங்கள்
தேங்கித்தான் கிடந்தது
'அடையாளம் காணப்படாத'
சடலமாய்...
நங்கூரமாக புதைந்து போனேன்,
விட்டுப்போன சுவடுகளின்
பதிவுகளில்.

இலவம் பஞ்சாய் கண்முன்
வெடித்து காணாமல்
போகின்ற அலிகளுடன்
திரும்பிவிட்டேன்
உறைந்து கிடக்கும் உன்
மௌனம் மட்டும் கூறியது,
வாள்கொண்டு தாக்கும்
போர் வீரர்களை
வைத்திருக்கிறேன் என்று.
மழை ஒதுக்கிய சிற்பம்
கலைந்தது கனவு தேசத்தில்...!

எஸ்தர் லோகநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்





# நலம் பிறக்க வேண்டும்

மலையகத்தில் ஊதுகின்ற சங்கு
மங்கையவள் வாழ்வில் பெரும் பங்கு
இலைதளிரைக் கொய்ய வந்து இங்கு
இன்னல் படும் வாழ்வு வேறு எங்கு

தலைவாரிப் பொட்டிடவா நேரம்
தலைமுழுகி ஆகிறதிரு வாரம்
முலையசைய முதுகில் பெரும் பாரம்
முந்நாளில் செய்ததிந்தப் பாவம்

தலையெழுத்து கொழுந்தெடுக்க வேணும்
தவறாது மலைக்குச் செல்ல வேணும்
குலை நடுங்க குளிரில் வாடவேணும்
கூடை நிறைய கொழுந்தெடுக்க வேணும்

இருள் விலக எழுந்து செல்லும் வேளை
இளங் குழந்தை அழுது சுற்றும் காலை
அருள்புரிய யாருமில்லா ஏழை
எதிர்காலம் என்பதோர் பாலை

கொழுந்தெடுத்தால் இங்கு உண்டு பேரு
குந்தி விட்டால் இல்லையந்தப் பேரு
எழுந்தலைந்தால் ஆடும் வாழ்க்கைத் தேரு
எங்கள் வாழ்க்கை மலையகத்தின் வேரு

இரண்டெழுத்து படித்து விட்டால் காலம்
எங்களையே மாற்றும் இனிமேலும்
கரம் எட்டும் கல்வியதால் நாமும்
கரை சேர்வோம் இன்பமுடன் நாளும்

நலம் நிறைந்த காலம் வரவேண்டும்
நம்வர்க்கு வாழ்வு வரவேண்டும்
குலங்கெடுக்கும் குடி மறைய வேண்டும்
கோபுரமாய் நிலை உயர வேண்டும்.

இஸ்மாலிகா (புசல்லாவை)

# சிறகு விரி

ஊழல் செய்தவனை உச்சியில் சுமந்து
பெண்மையை ஈனப்படுத்திய
நளாயினிப் பெண்ணாய் - நீ
நலமழிய வேண்டாம்

கண்ணிருந்தும் கண்மூடி
கணவன் பின்செல்ல
காவியச் சீதையல்ல நீ
விழிதிறந்தும் வழி மாறும்
விசித்திர ராமர்களை
வழி நடத்தும் ஒளிக்கதிர்

வையம் சிலிர்க்க வைத்த
ஜான்சி ராணி அன்று...
வனிதையர் பலர் வென்று
வாழும் கதை இன்று.
காட்சிக்குப் போகாமல்
உலக மீட்சிக்காக தன்
காருண்ய சிறகடித்து
கருணைச்சேவை செய்து கனிந்தாள்
அன்னை தெரேசா
இனித்தாள் எம் இதயங்களில்
விளக்கேந்தி சேவை செய்தாள்
நைட்டிங்கேள் எனும் பெண்ணாள்
விளக்கமாய்ச் சொன்ன பின்னும்
வியப்பாய் நீ மலைப்பதென்ன?

இத்தனை சிறகுகளில் உன்
சிறகின் வகையுணர்ந்து
உன்னத நிலையடைய
உறுதியாய் நிமிர்ந்து விடு
உதறும் உன் சிரிப்பில்
உடையட்டும் கட்டுக்கள்
இன்னும் ஏன் தலைகவிழ்ப்பு
மகளிர் பெறா விடுதலைக் காற்றுப் பெற
உனைத் தயார்படுத்தி





சிறகு விரி
பிறகு விரி

வா என் புயற் பெண்ணே
உள்ளே சிறகசைத்து
இப்போதே பறக்காமல் உதிர்ந்த பின்
உதவாத எலும்பு பார்த்து
ஒப்பாரி வைப்பாயோ?

அடி பறவைப் பெண்ணே
நின்று கேட்டுச் செல்
நீ சிறகடிக்கும் வானில்
உனை முறைத்துக்
கறுக்கும் ஆண் மேகங்களைக்
கண்டால் எச்சரிக்கை
ஆம்... அவை முகிழ்க்குமோ
முழங்குமோ யார் அறிவார்..?

பூவையே!
பொய்யான அழைப்பிருக்கும்
போதையுடன் உனைப் பார்க்கப்
போவது பூசைக்கென்றால்
புன்னகை உதிர்த்துவிடு
அழைப்புகள் காட்சிக்கடி,
அடித்துத் துரத்திவிடு!

உன் சிறகுகளை
நீயே சிதைத்துக் கொண்டு
மரபுக் கூட்டுக்குள் அடைபட்ட காலம்
மலையேறிப் போச்சு
வெளியே வா.

அடடா...
அது என்ன உன்
சிறகுகளில் புராணப் பிசுபிசுப்பு?
அறிவுச் சுடரொளியில்
உலர்த்திக் கொள் விரைந்து!

புனிதகலா (வட்டவளை)

# கற்பகதருக்கள்

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம் என்ற
முண்டாசுக்கவியின் முழக்கம்
எங்கோ ஒரு மூலையில்
நொண்டி அடிக்கின்றது

மானங்காக்க போர் புரியும்
மங்கையர்க்கு பொன்னாடை பொற்கிழியோ
அதையும் மீறி
அபிஷேகம் செய்கிறார்கள்
இரத்தத்தால்.

பெண் மகவு பலருக்கு பிசிரடிக்கும்
ஆண் மகவு வேண்டுமென
ஆலயங்களில் அர்ச்சனைகள்
சிசுவைக்கூட பெண் என்றால்
ஆராய்ந்தழிக்கும்
பேர்போன ஆய்வாளர்கள்

பிரபஞ்ச அழகிகளாம்...!
பெண்ணுக்கென்ன பெருமை?
விளம்பர உத்திகளில் விலைபோகும்
பெண்ணழகு காம வேட்கைக்கு
கழி முகங்களாகும் கன்னியர்

கணவருடன் செல்லும் மனைவியரையும்
துகிலுரியும் நவீன துச்சாதனர்கள்.
மனிதம் புனிதம் பெறுவது பெண்ணால்
பெண் புனிதம் கெடுவது யாரால்?





இரா.தேவிகா



காக்க வேண்டியோர்
காடையராய் மாறிய பின்
ஊளையிட்டு
ஆர்ப்பரிக்கும் உள்நாட்டு வெறியர்கள்
உதிரம் தனைக் குடிக்க
எதிர்பார்த்திருக்கும் இராட்சத அட்டைகள்
இவர்களுக்கு
கன்னியரே கற்பதருக்கள்!!

# எரியூட்டப்பட்ட தலைப்பு

செழுமை மிக்க மலையகத்திலே
ஏழ்மை கொண்ட
தற்கொலை முயற்சிகள்தான் எத்தனை?
அத்தனையும் தீக்குளிப்புத்தான் - இதில்
மீண்டவர் சிலர் மாண்டவரோ பலர்
அதிலே
சித்திரைப்புத்தாண்டு அண்மிய வேளையிலே
பஞ்சபாண்டவர் போல் ஐவரை
ஈன்றெடுத்த ஓர் அன்னை
கொண்ட அவசர முடிவு

அவள் அன்னை மட்டுமல்ல
அழகிய சிற்பமும் தான்
யாருக்கும் அஞ்சா நெஞ்சமும்
மாடாய் உழைக்கும்
உடல் வலிமையும் உளவலிமையும்
கொண்ட ஓர் அதிசயப் பிறவி

யாருக்கும் அவசரத்தில் உதவிடும்
அன்பான குணம்
ஆத்திரம் கொண்டாலோ
அடங்காப் பிடாரியாய் ஆவேசம் கொண்டு
நடமாடும் ஒரு 'பயங்கரவாதி'
அவள் சித்திரைக்கு முன் வந்த ஒரு
வியாழனிலே மேற்கொண்டதன் விளைவு
இன்று இவ்வுலகினிலே
ஐந்து பிள்ளைகளைத் தவிக்கவிட்டு
தனக்கு மட்டும் தனிமையினை
தேடிக்கொண்டாள்

தனிமை நாட அவள் பின்பற்றிய வழி
கண்டோரை கதிகலங்கச் செய்த தீக்குளிப்பு
நான்கு லீற்றர் மண்ணெண்ணையில்
குளிப்பதுபோல் தன்னாடைகளை நனைத்து





தீமூட்டிக் கொண்டாள் - உடன் தன்
குழந்தையையும் பாழாக்க நினைத்தாள்
தெய்வாதீனமாக தப்பியது அந்த
சின்னஞ் சிறிசு

பார்வதி எனும் இந்த அபலையோ
தீமூட்டி
தான் வாழ்ந்த வீட்டைச் சுற்றி
'நான் பத்தவச்சுட்டேன்' என
பரிகாசமாக பாடிக்கொண்டு
ஓடிவந்தாள் - இதுகண்டு
பலம் கொண்டவர் என பறைசாற்றும்
ஆண்வர்க்கம் கூட
அஞ்சி ஓடியதே - ஆனாலும்
எதற்கும் அஞ்சாத பார்வதியோ
பலசாலியாய்
இராணுவப் பயிற்சி பெற்றவள்போல்
ஆற்றிலே பாய்ந்து
மீண்டும் எழும்பி வந்தாள்
வெள்ளைநிற துணியால் உடலை
போர்த்திக்கொண்டு
தைரியமாய்க் கதைத்துக்கொண்டு
தானாகவே வேனிலே ஏறினாள்,
வைத்தியசாலைக்கு.
ஒருவேளை...
உயிரோடு மீண்டுவந்து தன்
வாரிசுகளைக் கவனித்துக்கொள்ளும்
மீள்ஆசையுடன் அவள்
தத்தளித்திருத்தல்கூடும்.

அவள் உண்மையாய் இம்முடிவை தேடக்
காரணமானவனும் அடுத்த வீட்டு
ஆண்மகன் தான்
இன்றைய பாலியல் துன்புறுத்தல்கள்
தொடரும் வரை
இந்நிலை தொடர்ந்திடுமோ??

பொ.கீதாகௌரி (பொகவந்தலாவை)

# உன்னில் இல்லாத நான்

இயல்புப் போக்கின்
கால்வாசிப் பங்கையேனும்
பெற்று விடாத
சிறுபிள்ளை என்னில்
காணும் சிறுபிழைகளுக்காகவும்
மிக உரத்துக் கூவுகிறாய்.

வயதுமூவாறில் மணமாகி
முழுதாய் உனக்கானேன்

மலைகளேறி
மழையில் நனைந்து, விறைத்து
கொழுந்து சுமந்து, இறக்கி
களைப்போடு வீடு வருகின்றேன்
வழமை போலவே.

வழமைக்கு மாறாக
என்றாவது
ஒரு கோப்பை தேனீர் தந்து
அதிர்ச்சியின்பத்தால்
சிலிர்ப்பூட்ட
உன்னிடம் ஏனில்லை
என்னைப் பற்றிய சிறு எண்ணம்?

எஸ்.கலைச்செல்வி
குயின்ஸ்பெரி





# ஏனெனில்

வாயுள்ள
ஊமையாய்
நான் இங்கு...
சுதந்திர முழக்கம்
ஆண்டுகள் அறுபதை
கடக்கிறது
மணவாழ்வு வயது
ஆறைக் கடக்கிறது
ஆயினும் என்ன?
பார்த்தலும், சிரித்தலும்
பேசவும்... ஏன்?
நினைத்தலும் கூட
விலங்குகளுக்கிடையே
தீர்மானிக்கப்படுகின்றன
ஏனெனில்
நான் ஒரு பெண்!

க.கவிதா
உனுக்கொடுவ



# பாவசங்கீர்த்தனம்

என்னைத் தேடாத பணத்தை
நான் தேடி
ஓய்வில்லாதோடி
கூடுவாரோடு கூடி
பலரிடம் பாசாங்காய்ப் பல்லிளித்து
மனசுக்குப் பதிலாய்
“செல்போனுக்குள்”
உறவுகள் நிறைத்து
இல்லாள்
‘இடித்து’ அவித்தளித்த பாகத்தில்
வயிற்றை நிரப்பி
கழுத்துக்குமேல் மட்டுமே
அதிகமாய் வாழ்ந்து
தலைகீழாய்த் தொங்குகின்ற
வௌவாலின் வாழ்வன்ன போதுகளில்
தசாப்தங்களைக் கடத்திவிட்ட நான்









இன்றிரவில்
உன்னை நினைக்கிறேன் தாயே!

குளிர் விறைத்து
தலையில் கூடையையும்
வயிற்றில் என்னையும்
சேர்த்துச் சுமந்துகொண்டே
திரிந்ததால்
மண்டையோட்டில் மாறாத பள்ளத்தையும்
அடிவயிற்றில் அழியாத கோடுகளையும்
போட்டுக்கொண்ட என் தாயே,
இந்த இரவில்
உனை நினைக்கிறேன்.
தூரத் தொலைவில்
தொலைத்துவிட்ட உன்மகனின்
பிள்ளையைத் தேடி
தள்ளாத வயதிலும்
தனியே ரயிலேறி
அடுத்த வண்டியிலே
அவளோடு புறப்பட்டு
கோயில் காட்டி கோபுரம் காட்டி
தேர் காட்டி திருவிழா காட்டி
குதூகலிக்கும் அம்மா,
இன்னுமொரு தடவை
எனக்குன் கருவறையில் இடம் தருவாயா?
அதுமட்டும் போதாது,
என்னை ஈன்றதுமே நீ
இறந்துபோகவும் வேண்டும்...!
தாய்முகம் காணாத தற்குறியாய் வாழ்ந்தாவது
என் பாவங்களைக் கழுவுவேன்.

**மீனாள் செல்வன்**

## நான் தாயா? கூலியா?

தலைநகரில் நீ போட்டது
இருவாரம் தாமதமாய்
தலவாக்கலையில் என் கைகளில்
தவழ்ந்தது.

கடிதம் முழுவதிலும்
சுழியோடிய என் கண்கள்
ஒரு வார்த்தையேனும்
தலவாக்கலை தண்ணீரில்
மூழ்குவது பற்றி
இல்லாததால் மூடிக்கொண்டன.
ஆழ்ந்தேன், கவலையில் நான்.





மலைகளைக் காக்கச் சென்ற
லட்சமணனை
சுட்டுத்தள்ளிய வேளையில்
கருவாய் உனை சுமந்ததனால்
உனக்கிட்டேன் அவன் நாமம்
மாதாந்தம் பணம் அனுப்புவதால்
நிலம் வாங்கி வீடு கட்டுவதாய்
வீட்டு கன்னிகளை
கரைசேர்ப்பதாய் காகிதம்
எழுதியிருந்தாய்
உன் வாக்குறுதிகள்
தொழிற்சங்க தலைவர்களை
கண்முன் கொண்டு வந்தன.

உன் பூட்டனும் பூட்டியும்
பாட்டியும் பாட்டனும்
அம்மாவும் அப்பாவும்
காத்து வளர்த்த மண்ணை
தண்ணீரில் மூழ்கடிக்க
தரகர்கள் முயல்கிறார்கள்
நம் மண் மீதான
லட்சுமணனின் ஓர்மம்
உன்னில் காணாது
கவலை அடைகிறேன்
கோபம் கொள்கிறேன்

சுயநலத்துடன்
உனைக் கருவில் சுமக்காத
மகிழ்வில் வாழ்ந்த என்னை
நீயும்
கூலி என்றா நினைத்தாய்?

மலைமதி

# வேடதாரிகள்

உலக மேடையின் கூத்தாடிகள்
உயிரோட்டமுள்ள பாத்திரங்கள்
தரப்பட்ட முறையின் தவணைமுறை
நடிகர்கள் வந்ததற்காய் நொந்தவர்கள் சிலர்
வாழ்க்கை பூங்காவான வண்டுகள் சில

இவர்கள் தரித்தவை களைய முடியாதவை

குடும்ப கூட்டுப் புழுவில் அம்மா, அப்பா
சகோதரர், நண்பர்கள், அன்பர்கள்
இன்னும் எத்தனை எத்தனை...!
படைத்தவனும் சளைக்கவில்லை
ஒன்றா, இரண்டா ஓராயிரம்
ஒவ்வொன்றும் வெவ்வேறு விதம்

இறப்பும் இடைவேளை தான்
மீண்டும் பிறப்பு மிதிபட்ட
ஜென்மங்கள் மிஞ்சுவது என்ன?
வினாவிற்கு விடைதேடியோர்
மனநல மனையின் மதில்களுக்குள்
புதைந்தனர்.

எஞ்சுவது என்ன?
ஏகோபித்த கோஷங்கள்
திரும்பி நோக்குகிறேன்
வேடதாரிகள்!

க.காஞ்சனா





# புறப்படு விடியலை நோக்கி

மெய்யாகவே கவிஞர்களுக்குள்
கருத்துக்கள் புதுமையெனின்
புகழுரையைத் தவிர்த்துவிட்டு
போராட்டங்களை புனைந்திடு
பொய்யுரைகளை விலக்கி
புதிய எழுத்துக்களை விதைத்திடு

ஆயிரம் சாதி மனிதரில் தேடி
ஆவது என்ன பாரினில் நீதி
கொல்லனும் கோமானும் மனிதசாதி
கடமைகளுக்காய் பிரித்த சாதி
மடமைகளுக்காய் அளித்த பூதி
வேண்டாம் சாஸ்திர நீதி

சீதனச் சோதனைகளோடு
ஆணிடம் தஞ்சம் கேட்டு
அவனாலே அடிமைக் கோலமா?
அஞ்சியஞ்சி ஒரு அவல வாழ்வா
அபலையாய் வாழ்ந்திடாது
அறிவியலைத் தேடி அனலெனப் புறப்படு

தாயின் முலைகளை அறுத்து
குழந்தை பசி தீர்ப்பதெங்கே?
புட்டிப்பாலையும் பருக்கி
தட்டி விட்டே சிதறிய பின்
தவறென வருந்துகிறது உலகம்
தவறியும் செல்லாதே அங்கே
புறப்படு விடியலை நோக்கி!

மணிமேகலா செல்லத்துரை
கொட்டகலை

# என்று தணியும்?

**புனிதகலா**
வட்டவளை

மலையோடு மலையாக
மலைத்துப் போய்
நிற்பது ஏன்
மணிச்சுடரே?

இரும்பு இதயத்தில் என்
மனக் குமுறல் கொண்டு
எத்தனை முறை
அடித்திருப்பேன்
எழுந்தது நாதம்
அது...
உன் குரலா? என் குரலா?
ஏதோ ஒரு அழுகுரல்
அல்லவே அல்ல
பல குரல்களின் சங்கமம்
உயிரை அறுக்கும் ஓலம்!

அவலத்தின் ஒப்பாரிகளால்
கரைந்தொழுகும்
பனிச் சூரியன் அல்ல நீ,
தீமையைச் சுட்டெரிக்கும்
தீப்பிளம்பு

இந்த திகிப்புகள் தவிப்புக்கள்
அஸ்தமனத்திற்காக அல்ல
புதியதொரு விடியலுக்காகத்தான்
உதித்து உதித்து ஏன்
உறங்கிப்போகிறாய்,
அரசியல் பகடையாய்.

விழித்திருந்து உறங்குவது
உனக்கு மட்டுமே
சாத்தியம்.
துடைத்தழி!
எவனோ ஒருவன்
மேல் தட்டில் வாழ
உன் உணவுத்தட்டை
ஏன் கொடுத்தாய்
சுவரமைக்க?

துயிலெழு,
உனை நழுத்துப் போக
நான் விடமாட்டேன்
கால மேகங்களை என்
பேனா முனையில் பொசுக்கி
உனக்கு
புது உதயம் தருவேன்,
இதயத் தசை கிழித்து
உதிரத் தேன் கலந்து
பெருமூச்சில் சுட்டெடுத்த!



விழித்திரையாகி
விழி மறைக்கும்
துளிநீர் உப்பிட்டு
இன்னும்
எத்தனை நாளைக்கு
விருந்து வைப்பாய்?

இன்றாவது விடிய உன்
கதிர்க்கரம் விரித்தெழு!
கண்ணீர் மழை போதும்
சும்மாவே
இந்தச்சாயம் கரிக்கின்றது
உழைப்பைத்தான் பறிகொடுத்தாய்
உணர்வுகளை

ஏன் தொலைத்தாய்?
அட...
இன்னும்தான் மௌனம்
பொய்மொழி மோகம்
உனை நன்கு புதைக்கிறது
என்றுதான் ஒன்றிணைவாய்?

கொதித்துக் கொதித்து
தணல் குமுறிய போதெல்லாம்
சமாதானம் என்ற வார்த்தையினால்
அழிந்து போவது ஏன்?
அடக்கும் கையழிக்க
அலையும் உணர்வுக் கனல்
என்று தணியும்?



# ஏனிந்த அவலம்

நடந்து வந்த பாதையிலே
நடந்து முடிந்த சம்பவங்களை
அசைபோட்டுப் பார்க்கையில்
ஆசையின் வேகத்தால்
மோசமாக நடந்தவைகள்
விழிமுன்னே தோன்றும் போது
விடியலுக்காய் மனம் ஏங்குகிறது

வார்த்தைகளை அடகுவைத்து
வயிற்றினை நிரப்புவதற்கு
வாங்கிய சில்லறையோ
வட்டியோடு குட்டி போட
வயிற்றுப் பசியோ
வறுமையால் தடம் மாறுகிறது

பட்டம் பெற்ற இளைஞர்களோ
படியேறி வேலைதேடி
பட்டினிப் போராட்டத்திற்கு
பகைக்கொடி தூக்க முனைகையில்...
வேலை கிடைக்காத
மனஉளைச்சலும்
எதிர்கால எதிர்பார்ப்பும்
தூசுதான் என்றவர்களுக்கு
தூக்க முடியாப் பளுவாகி
தலைகுனிய வைக்கிறது.

சு.பிரேமராணி





# இன்னும் எத்தனை காலத்திற்கு

சுழன்று சுழன்று செயலற்றுப்போன
மணிக்கட்டுடனும்
சுரந்து சுரந்து வற்றிப்போன
வியர்வைச் சுரப்பிகளோடும்
தேயிலைச் செடிக்குள்ளேயே
ஆயுளைக் கழிப்பது
இன்னும் எத்தனை காலத்திற்கு?

செவ்வாய்க் கிரகம்வரை சென்றுவிட்ட
மனிதக் கூட்டத்தினிடையே
பிரட்டுக் களம் சென்று
இருட்டுத் தவம்செய்வது
இன்னும் எத்தனை காலத்திற்கு?

இடர்தனில் இரண்டறக் கலந்து
சுடர்விடக் குமுறாத அறிவுடனும்
படர்ந்துவிட்ட அறியாமையை
தகர்த்தெறியா மடைமையுடனும்
சிதைந்த கோபுரங்களாகவே
இன்னும் எத்தனை காலத்திற்கு?

ஜி.ஷர்மிளா
அரங்கலை

# ம(ர)ண பந்தம்

அலங்கரிப்பதற்கு முன்பு
துண்டு துண்டாய்
கிடக்குமென்னைப்
பொறுக்கிப் பொருத்து

வெறியெடுத்த வேளையிலெல்லாம்
வாசலில்லாத ஓநாய்கள்
கதறியிருக்கின்றன
எதையாவது பூசி
என் காயங்களாற்று

கைகளில் காய்ந்துப் போய்
இன்னும் கழற்றப்படாதிருக்கும்
இரும்பு வளையத்தை முதலில்
உடைத்தெறி
கண்ணாடி வளையல்களை
அப்புறம் அணியலாம்

என்ன பிடிக்கும்?
என்றெல்லாம்
அபிப்பிராயம் கேட்டு
மேலும் என்னை நொறுக்காதே
பிடித்தமானவை எல்லாம்
மறுக்கப்பட்டும்
பறிகொடுத்தும்
பழகியவள் நான்

இரகசியங்களின்
தடயங்கள் தெரியாமல்
என் நிர்வாணத்தை மறை





தலைக்கு பூச்சூட்ட முன்
இதுவரை
சுமத்தப்பட்ட முள்முடிகளை
கும்பைக் கூடைகளை
இறக்க உதவி செய்

கண்ணுக்கு மையிடுகிறாயா?
சற்றுப் பொறு
அதை நிறுத்து
ஏனெனில்,
எல்லா நேரங்களிலும்
க(பெ)ண்
கண்ணீர் விட வேண்டிய வஸ்து
தள்ளி வை!
நினைவுகளில் விழுந்த அடி
கடும் சிவப்பேறியிருக்க
விரல்களில் மருதாணி
அவசியமற்றது.

உணர்ச்சிகள் ஆர்ப்பரித்து
மீறி வழிந்து விடாது
இதயத்தை
மிதித்துப் பிடிப்பதற்காகத்தானே
உயர்ந்த குதிச் செருப்புகளையும்
பூட்டி விட்டாய்

ஆகட்டும்
இனி அழைத்துச் செல்
அந்த ம(ர)ணப்பந்தலுக்கு!

ஜே.அன்னால் குளோரி

# ஏனிந்த அக்கிரமம்

சமாதானப் புறாக்களைப் பறக்கவிட்டு
சவம் தேடும் கழுகுகளுக்கும் இரையிட்டு
செல்வந்தச் சோலைக் காவலனாய்
வேண்டாம் ஒரு தலைமைத்துவம்

மனிதன் மறுவாழ்வு தேடுவது நியாயம்
மறுபடி மறுபடி
மனிதப் படுகொலைகள் தேவையா?
புகலிடம் தருவதாய் புனர்வாழ்வு தருவதாய்
சுடலைப் பூசைகள் எதற்கு

உலகிற்கு ஒப்புவிக்கும் ஒப்பனைகள்
ஒற்றுமையின் பொய் முழக்கம்
ஓட்டைக் குடத்து நீரது
ஒருமைப்பாடு தூரதேசமாகவேயுள்ளது.

மன்னிப்புச்சபை, மனித உரிமை நிறுவனம்
மரணித்துவிட்ட தலைமையகங்கள்
மனுக்கள் எதற்கு?
கனன்று கொண்டிருக்கும் தணலிலே
உழன்று கொண்டிருக்கிறது ஓரினம்
சுழன்று வருகின்றது பேரினம்
கழன்று விடுகின்றது தனியினம்
புற்றெலி நெற்றெலி எதுவானால் என்ன
புற்றுக்குள்ளே புகலிடம் தேடாதே
அரவங்களின் அலசல்களுக்குத் தப்பமாட்டாய்
மெழுகெனவே உருகி உருக்குலையாதே
கழுகுகளின் கவனம் உன் மீதே

அபிவிருத்தி எனக்கூறி
அகதி முகாம்களின் எண்ணிக்கை





**மணிமேகலா செல்லத்துரை** (கொட்டகலை)

அற்புதமாய் அதிகரிப்பு
சிறப்பான அரசாட்சி...!

பொதுக் கூட்டங்கள் மனிதனுக்கா?
பிறக்கும் சட்டமெல்லாம் தமிழனுக்கா?
ஊரடங்கு உத்தரவு சட்டம்
உனக்கு மட்டும் நடமாட்டமா?

காவல் தெய்வங்கள் புறப்பட்டு
நகர் வேட்டையும், கன்னிவேட்டையும்
செய்வதற்கா சட்டங்கள்
கடமையாளர் குற்றம்
கணக்கெடுப்பில்லையா?

காடையர் கூட்டத்திற்கு
கடமையாளர் தலைமைத்துவம்
கண்மூடித்தனமாக
கருத்துக்கள் முன்வைப்பு
காலனிடம் சென்றவர்கள்
கதையென்ன ஆவது?

தொட்டிலையும் ஆட்டிவிட்டு
பிள்ளையையும் கிள்ளிவிட்டு
யாருக்கு சமாதானம் எப்போது சமாதானம்
ஏனிந்த அக்கிரமம்

படைகள் சுற்றிவளைப்பு
பயணிகள தரப்படுத்தல்
தமிழனுக்கு வைக்கும் வேட்டுக்களா?
ஏனிந்த அக்கிரமம்.



# பட்டமளிப்புகள்

போட்டிகளேதுமின்றி
வெற்றியுமேதும்
பெறாத அவளுக்கு
'பட்டமளிப்பும்'
பாராட்டு விழாவும்
ஊர் விரும்ப நடந்தது.
விதவையெனும் பட்டம்
வெண்ணாடை போர்த்தி
வழங்கப்பட்டது
விபத்தில் இறந்திருந்தான்
கணவன்.

# நல்வரவு

மதுரை எரித்த கண்ணகியாய்
வாழைமரம் வாசலில்
தலைவிரித்து நிற்க
இருப்பிடமிழந்து நகரும்
அகதிகளாய்
தோரண மாவிலைகள்
இவற்றின் நடுவே
கொட்டை எழுத்தில்
'நல்வரவு'
இன்முகத்துடன்
எல்லோரையும் வரவேற்றது.
வெறித்துப் வெறித்துப் பார்க்கிறான்
பிச்சைக்காரன்!

எம்.புனிதகுமாரி
தலபத்தன





# ஆசான்

அறிவுக் கிணறிறைத்து
அள்ளிக் கொடுக்குமவன்
அகிலம் புகழ்கின்ற
அருமை கொடை வள்ளல்

சமூகத்தின் அழுக்ககற்றும்
சான்றோனே நல்கிடுவோம்
சமூகமான நல் நண்பன்
சகலதையும் கற்றுணர்ந்தேன்

தினந்தோறும் கற்பவனே
சிறந்த குரு ஆவான்
கசடறக் கற்றவர்க்கே
கற்பிக்கும் தகுதி வரும்

முற்போக்கு உள்ளவனாய்
மனதில் பெருமையுடன்
மாசற்ற குணத்தினனாய்
மனிதர்க்குச் சேவை செய்யும்
மன இயல்பு கொண்டனே
நல்லாசான்.

சமூகத்தின் அழுக்கற்ற
சத்தியநோக்குடனே
சந்ததியை வளப்படுத்தும்
சற்குருவே நல்லாசான்!

சுப்பிரமணியம் சர்மிளா

## அப்பா

தாய் என்னை கருவில் சுமக்க
நீங்கள் என்னை
தோள் மீது சுமக்க
தோழனாகினீர்கள்.
நீங்கள் என் தந்தையானதற்கு
நான்
பெருமைபட்டுக் கொள்கின்றேன்
எந்நாளும்.

உணர்ச்சிக் குவியல்களின்
குழப்பங்களினால்
உலகமே தடைபுரண்ட போதும்
மனத்தத்துவங்கள்
மனச்சாட்சியிலும் தனித்து
இயங்கிக் கொண்டிருக்கும் போதும்





உங்களால் எப்படி
இவ்வளவு உறுதிபூர்வமாய்
வாழ முடிகிறது!

துள்ளித் திரியும் சிட்டுக்களாய்
சிறகு முளைக்கும்போது
இதுதான் சுதந்திரமென்று
பறக்க முயற்சித்தோம்
காவலனாய் நின்று
வழிப்படுத்தினீர்கள்
குழந்தையாய் நாம்
குற்றமிழைத்தோம்
உரிமையோடு எமைத் திட்டி
அரவணைத்தீர்கள்
தன்னை வெறுக்கும் ஒருவரை
விரும்பச் செய்யும்
உங்கள் பாசம்
விலை போகக் கூடியதா?

இம் மண்ணில்
விருட்சத்திலிருந்து விழுந்த விழுதுகள்
காலூன்ற
விருட்சமே குடிநீராக...
போசனையாக...
மாறிய தியாக உள்ளமே
நீங்கள்
விதைத்த வித்துக்கள்
என்றுமே பலருக்கு
நிழலைக் கொடுத்து
உங்களுக்கு பெருமை சேர்க்கும்
என்பது திண்ணமே!

சே.மேரிதெபோராள்

# என் அன்னையும் இப்படித்தான்

ஆயிரம் கனவுகளோடு
அவள் சுமந்தாள்
அயராது துயில் கொண்டேன்
அன்னையின் அடிவயிற்றில்

அடியெடுத்து வைத்த போதே
ஆரம்பித்தாள்
அவள் சேவைதனை
அவள் நிறங்கள் மாறின
ஆயினும் நிறைகள் மாறவில்லை

மட்டக் கம்புடனும்
கொழுந்துக் கூடையுடனும்
நடந்து கொண்டிருக்கிறாள்,
நான் பேனைபிடிப்பதற்காக.
ஆயிரம் பேசுகிறான்
கங்காணி
ஆயிரம் அவலங்கள்
அடைக்கப்படும்
கொழுந்துக் கூடையில்
இடுவது போல

தேயிலையைத் தேடித் தருபவளுக்கு
தேகங்கள் வரண்டு போனது
தேயிலையை அருந்துபவன்
ஆயுள் கூடுகிறது

அவள் அடியெடுக்கும்
ஆண்டெல்லாம் அந்நாடு
அளவில்லா வருமான வளர்ச்சி
அங்கே அவளின் வீட்டில்
வருடமெல்லாம் வருமான வீழ்ச்சி





உடுத்த உடையின்றி
அரைவயிறோடு உண்டு
வாழ்கிறாள்
உடைத்தெறியும் காலம்
எப்போது வரும் என்று

அவள் பட்ட பாட்டிற்கு
அவள் பார்வையில்
நானோர் படிப்பாளி
அவர்கள் பார்வையில்

நாங்களெல்லாம்
பாட்டாளிகள்

எல்லை இல்லை
அவள் உழைப்பிற்கு
ஏற்றமும் இல்லை
எங்கள் வாழ்விற்கு

இவள் படும் பாடு
பட்டினிக்கு மட்டுமல்ல

என் படிப்பிற்கும்
இச் சமுதாய உயர்விற்கும்
எம் நாட்டின்
வருமான ஏற்றத்திற்கும்

தொடர்வன எங்களின்
சுமைகள் மட்டுமல்ல
துன்பங்களும்தான்!

**ஜெ.ரெஜினா**

## துாங்காத இரவில்
## நீங்காத நினைவு

கருமேகக் கூட்டங்கள்
கலைந்து ஒன்று கூடி
சிறகொன்று விரித்திட்ட
சிறுவேளை தனிலே
வரவென்று எதிர்பார்த்து
வண்ண நிலவுடன்
வந்து உதித்த வேளையதன்
வரவாம் அந்த இரவு

அதிலைப் பொழுதென்று
அறைகூவி அழைத்திட்ட சேவல்
ஒலி பரப்பி
ஆர்ப்பரித்த பறவைகள்
துள்ளிவந்த உற்சாகத்தில்
துளிர்விட்டெழுந்த மனங்கள்
ஒன்றுகூடி தம்மின்
உயர்வு உழைப்புக்கு விரைய...

பட்டாம் பூச்சிகளாய்
பாடசாலை சிட்டுகளும்
கொங்காணி போட்டு
நிதம் கூடும் கூடைக்காரிகளும்
எட்டுமணி பிந்திவந்தால்
ஏச்சுகளுடன் கங்காணிகளும்
பிள்ளை மடுவமதனில்





பேரம் பேசும் பிள்ளைகளும்
சுரண்டிக் கம்புகளும்
சுடுதண்ணீர்ப் போத்தல்களும்
நித்தம் இவர் வாழ்வில்
நிழல்களாய்த் தொடர்கையில்...

அல்லும் பகலும் அரை உறக்கமில்லாது
துட்டுப்பணம் பெற்று தம்
துயர்துடைக்க வேண்டுமென்று
எட்டி நின்று கொழுந்தெடுத்து
இறக்கி வரும் சுமையில்
பெற்ற சுமை மறந்து
பெருமிதம் கொள்ளுகின்றார்

பத்து மலைக் கொழுந்தெடுத்து
பத்து கான் குழிவெட்டி
தொங்கத் தொங்க ஓடுகிறார்
தோள் ஒடிந்து திரும்புகின்றார்
காம்பிரா லயமதனில்
கால் நேரம் கழித்துவிட்டு
நாலுபணம் தேடி
அந்நியர் காணிக்கு ஓடுகிறார்
மங்கிய ஒளியதனில்
மறுபடியும் திரும்புகின்றார்
நாளை மலரும் நாளுக்காய்
மனுப்படிவம் தனை கொடுக்க
விடியலைப் பார்த்திருக்கிறார்

இன்றைய இரவினைப்போல்
என்றும் தொடர்வதுவோ
எம் மக்கள் நிலை?

எஸ்.விஜயபாரதி
கொட்டகலை

## பெண்ணே உன் நிறம் என்ன?

பெண்ணே உன் நிறமென்ன - நீ
பேசும் மொழி என்ன
உன் அன்பின் விலை என்ன - அதை
அறியாதோர் நிலை என்ன

அடைத்த வீடு
உன் உலகம் இல்லை -அதை
அறைந்து சாத்தவும்
யாவரும் இல்லை
திறந்து கிடக்குது இந்தப் பூமி - அதை
தெளிந்து தெரிய வா வா
அடிமை என்பது உன் பட்டமா - அதை
அணைத்துக் கொள்வது உன் திட்டமா?

விடியல் என்பது உன் மொழியடி - அதை
விளங்கிக் கொள்வது உன் வழியடி
மௌனம் என்பதை கலைத்துவிடு





உண்மை மனத்திற்கு
என்றும் நீ மாலையிடு

பெண்மை என்பது வெறும் போதையில்லை - அவள்
உண்மை என்பதை நீ உணர்த்து
மென்மை மட்டும் அவள் வேதமல்ல
வன்மையும் உண்டென நிலைநிறுத்து

வீசிடும் தென்றலில் மென்மையென்றால்
எரிந்திடும்
வீசிடும் சுடர் நீதான்
பூக்களில் வீசிடும் வாசமென்றால் - அதில்
முட்களாய் உள்ளதும்
உன் உருதான்
உண்மையை மட்டும் நீ போற்றிடு
வரும் பொய்மையை
வேரோடு நீ மாற்றிடு

காலத்தை மட்டும் நீ
குறை சொல்லாதே - அதில்
கயவர்களின் திட்டத்தை எதிர்கொள்ளாதே
நீதிக்கு மட்டும் நீ தலைவணங்கு
நியாயத்தின் வழி என்றும் நீ இறங்கு
நல்ல ஒரு பெண்ணாய் நீ வாழு
நலமுள்ள தாயாய் உயர்வு பெறு
கலைகள் பேணும் தமிழ்ப்பெண்ணாய்
காலம் உன்னைப் போற்றட்டும்
பெண்மையின் நிறம் என்ன என்போர்
உண்மைதான் உன் நிறம்
எனத் தெரிவர்

ஆர்.பூங்கொடி
விந்துல



# தொழிலாளிப் பெண்ணின் சோககீதம்

இரவு பசி மீதமிருக்க
காலை பசியையும்
சுமந்து கொண்டு
எட்டாத தூரத்திலிருக்கும்
பச்சை மலையை எட்டிப்பிடிக்க
ஓடும் இளம் தாய்

காலை முதல் மாலை வரை
தேயிலையை கொஞ்சும்
அவளுக்கு - தன்
மழலையைக்கூட
கொஞ்ச நேரமில்லை

மாலை ஆனதும்
கூடையை முதுகிலும்
குடும்ப பாரத்தை மனதிலும்
சுமந்து கொண்டு







கால் கடுக்க நடக்கிறாள்
வீட்டை நோக்கி

பகல் முழுவதும் பட்டினியால்
வாடும் குழந்தைகள்
சாப்பாடில்லாவிட்டாலும்
சாராயமே வாழ்க்கையாகிவிட்ட
கணவன்

கூடையைச் சுமந்தே
கூன் விழுந்த முதுகுடன்
முப்பது வயதிலேயே
ஐம்பது வயதுத் தோற்றம்.

இந்த வேதனையிலும் அவள்
உதடுகள் சிரிக்கின்றன,
எப்பாடுபட்டாவது
பொறுப்பில்லா கணவனுக்கு
கள்ளும்
குற்றமில்லா குழந்தைகட்கு
கல்வியும்
பெற்றுகொடுக்க தன்னால்
முடிகிறதேயென்று.

மொத்தத்தில்
முட்களே ஆடைகள்
சோகமே அவள் சுவாசம்
வேதனையே
அவள் உலகம்.
இவள்
தேயிலைத் தோட்டத்
தொழிலாளிப் பெண்!

**அ. பரமேஸ்வரி**

# நாளைய விடியல்

வீணைகளின் நரம்புகளாய்
பெண்ணினம்
இனிய இசையைத் தரும்.
நரம்புகளின் பெருமையை
வீணைகள்
பறித்துக் கொள்வதுபோல்
சமுதாய வெளியினிலே
பெண்ணினத்தின் பெருமைகள்
இகழப்படுகின்றன.

சோதரியே!
சமுதாயச் சோதனைச் சாவடியில்
சந்தேக நபராய்
தடுத்து வைக்கப்படுவதை
தகர்த்தெறிந்து
விடுதலை முழக்கங்களை
வீரத்துடன் முழங்குவோம்
நாளைய விடியல்
பெண்மையைப் பாடட்டும்!

பூங்கொடி இராமையா
நாகசேனை





# விடியலுக்காய் காத்திருந்த அன்று

சுய பச்சாதாபங்களில்
எங்கள் யௌவனங்கள்
நகர முடியா ஒட்டுக்குள்
மௌனித்திருந்தபோது
திடீரென...
துருப்பட்ட கதவுகளும்
கீறிச்சிட்டன,
எங்கள் இறைச்சி
பேரினவாதத்தின் நாய்களுக்கே என்று.

விடியலை நோக்கி
அமானுஷ்யமான ஒலி எழுப்ப
முனைகின்ற அன்றே - அந்த
வெறிபிடித்த வேட்டை நாய்களை
குதறி
பதம்பார்க்க முடியாமல்
எங்கள் ஞானேந்திரியங்கள்
சிதறி
சகதிச் சமவெளியில் பிசிறிப்
படர்ந்தன

சிதிலடைந்த விலா எழும்புகளை
பண்டிகைப் பட்சணமாய்
பச்சையாய்த்
தின்றுதீர்த்தவர்களின் முன்
எஞ்சியதையும் சுட்டுத் தின்பதற்கு
வாயூறி
மண்டியிட்டு கிடக்கின்றன,
எங்கள் தலைமைகள்!

சி.சாரதாம்பாள்
தலவாக்கலை

## கூடைக்கு வெளியே

கூடைக்குள் உலகம் படைத்து
கூட்டாக வாழுமெங்கள்
தோட்டத்து மாதருக்கு
காதோரம் சொல்ல வந்தேன்
இரகசியமாய்க் கேட்கவந்தேன்

கூடைக்கு வெளியே சற்று
எட்டித்தான் பாருங்களேன்...

சாரதி என்ன பைலட் என்ன
நாட்டுக்கு நாடு ஜனாதிபதியென்ன
வைத்தியம் என்ன வியாபாரம் வரைக்கும்
பெண்களின் ஆட்சியம்மா - உலகமே
பெண்களின் இராச்சியம்
ஆனால்,

எத்தனை பெண்கள் எம்மில் இன்று
எம்மையே ஆளுகிறார் - உயர்
பதவியை நாடியுள்ளார்
சற்றே சிந்தனைக் குதிரையைத்
தட்டிவிடுங்கள்...
நினைத்திட்டால் பெண்கள்
முடித்திடல் இலகு.
இன்றே முடிவெடுங்கள் அதற்காய்!

கூடைக்கு வெளியே சற்று
எட்டித்தான் பாருங்களேன்..!

நாட்டின் கோட்டையெல்லாம்
நிமிர்த்திவரும் தேயிலையால்
நாமுயர வழியில்லை... பரவாயில்லை
ஆனால்,
எம் மனக்கோட்டைகூட உயரலையே!

லயங்களில் தூங்கிவிடும்
குதிரையாய் வாழ்ந்து நாம்





துயரினைச் சுமந்ததுபோதும்,
மனிதராய் வாழ்ந்திட
தனித்து முன்னேறிட
தைரியம் பிறந்திடணும்

அடித்து விழுத்திய
உள்ளக் குமுறல்கள்
எகிறிக் குதித்திடணும் - அதில்
நியாயங்கள் பிறந்திடணும்
இருட்டினில் மறைந்திடும்
உண்மைகள் விரைவில்
வெளிச்சம் கண்டிடணும் - எம்
பெண்களின் திறமைகள்
வெளிப்படணும்...
அதனால்,
கூடைக்கு வெளியே சற்று
எட்டித்தான் பாருங்களேன்..!

அடிமைகள் என்ற
போர்வையிலிருந்து
எழுந்து நடந்திடணும் - பெண்ணின்
குடியைக் கெடுத்திடும்
குடியை ஒழித்திட
கோதையர் குரல் தரணும்
நெஞ்சினில் நேர்மை இருக்க
நாம் ஏன்
பயந்து நடுங்கிடணும் - யாருக்காய்
ஒளித்து ஒடுங்கிடணும்
பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்
துணிந்து நடந்திடணும் - எம்
மண்ணில் தனித்து வலம்வரணும்
நம் சுவடுகள் பதித்திடணும்

கூடைக்கு வெளியே சற்று
எட்டித்தான் பாருங்களேன்!

சாந்தி மோகன்
பண்டாரவளை

# சிறைப்படும் நிஜம்

முன்பெல்லாம் அடிக்கடி
அம்மா திட்டுவாள்,
எப்படித்தான் நீ
உருப்படப் போகிறாயோ??

சாபங்கள் கூட வரமானது
வாழ்வில் நீ வந்ததால்

அழைப்பு மணிக்கும்
தொலைபேசி மணிக்கும்
பொறுப்புடன் பதிலளிக்கிறேன்
நீயாக இருந்து விடுவாய்
என்ற ஐயத்தால்!
சிலதில் உன் முகம்
பதிவாகி இருப்பதால்
பொருட்கள் எல்லாம்
நேர்த்தி பெறுகின்றது எப்போதும்!

அம்மாவுடன் போட்டியிடுகின்றேன் சமையலில்,
நீ
முகம் சுளிக்கக் கூடாது என்பதால்.
பல வேலைகளில் பளிச்சிடுகிறது
விருந்தினரின் பாராட்டு
அம்மா பெருமையோடு
எனைப் பார்ப்பார்!
எல்லாப் பெருமையும் உனக்குத்தான்
இதை
எப்படி சொல்வேன் அம்மாவிடம்?

**மா.மோகனா**
மஸ்கெலியா





## வல்லமை

மூலவர்ணமில்லாமலேயே
வெளுத்த சாதியின் நிறத்தை
மூடி மூடி மறைக்க முனையும்
ஏழைக்குமரியின்
பளுப்பு நிற கண்களுக்குள்
கண்டு கொண்டான்
கண்டு கொண்டான்

நிமிரமுடியா வெப்ப முகத்தினை
புத்தகம் பார்க்கும் பாவனையில்
குனிவித்துக் கொள்ளும் தாழ்வுணர்வை
கடைக்கண்ணால்
கேட்டுக் கொண்ட பின்னும்
'குலமும் குணமும்' பற்றி
விரிவுரை தொடர்வித்தான்.
விருப்பமின்றி அவள் பார்க்கும்
கருப்பு எழுத்துக்களில்
தந்தை தெருவோரம்
செருப்புத் தைக்கும் காட்சி
தேங்கிய கண்ணீரில்
நிறங்களாலான ஊர்வலமாய்ப்
போகின்றது

வார்த்தைகளால்
காட்சி செய்த வல்லமை
அந்தத் தேவ குருவினுடையது!

சூர்ப்பனகை





## கவிதை கிறுக்கல்

காகிதமும் பேனையும்
சந்திக்க நினைக்கும்
நிமிடங்களில்...
காதலைத் தொலைத்தவளாய்
தடுமாற்றத்தில்
கிறுக்கிக் கொண்டிருக்கிறேன்

அந்த அர்த்தமற்ற
கிறுக்கல்களுக்கு என்ன பெயர்?
வாசமில்லா அவ் வரிகளுக்கு
வசீகரமும் கிடையாது.

மனநோயாளி கையில்
கிடைத்த முத்துமாலையாய் என்
கிறுக்கல்கள்

என் பாதங்களுக்குக் கீழே
பூக்கள் அல்ல,
முட்கள்.

இன்று
என் பிரவாகம் கண்டு
கரைகள் பிரமிக்கலாம்
ஆனால் இந் நதி
கொதிக்கும் பாறைகளின் இடுக்கில்
இறங்கித்தான்
இங்கு வந்திருக்கிறது.

ஜெ.வித்தியாதர்சினி

## புதிய அறிமுகம்

புறப்படு தோழனே
புதிதாய் ஓர் அறிமுகம்
மனம் நிறைந்த என்
மலையகம் பற்றி.

பட்டாம் பூச்சிகளாய்
பறக்க வேண்டியவர்கள்
பணக்காரர்களுக்கு அடிமையாய்!

உழைக்க வேண்டிய அப்பா
ஊர் ஊராய்ச் சுற்ற
பாவம் அம்மா
பரிதவிக்கின்றாள் இங்கு.

படித்துப் பட்டம் பெற்றவுடன்
பெற்றவர்களை விட்டுவிட்டு
வெளிநாட்டு மனைவியுடன்
வேகமாய்ப் பறக்கும் மகன்மார்

உழைத்து உயர வைப்பான்
என எண்ணிக் காத்திருக்க
பொறுப்பற்றுச் சுற்றுகிறான்,
பொறுப்பில்லாத அண்ணன்.
மணமேடை காணா அக்கா
வெளிநாட்டுப் பயணம் என
வேட்டையாடப் படுகின்றாள்





கல்வி கற்க ஆசைப்பட்டு
காசு கேட்க அப்பாவிடம்
கருணை மனு விண்ணப்பிக்கும்
வழிதெரியா தம்பிகள்

இனியென்ன நிம்மதியென
பெருமூச்சு விடும் பெற்றோருக்கு
அநாதை என்ற பட்டம் வழங்கி
அலட்சியப்படுத்தும் தலைமுறைகள்

இலவசக் கல்வியதை
மேலதிக வகுப்பென்று
மேல்மூடி போட்டு விற்கும்
நய வஞ்சக ஆசிரியர்கள்

மாண்பு மிக்க தொழில் அதனை
மனசாட்சி சிறிதுமின்றி
பேரம் பேசி விற்கும் எங்கள்
பேராசை மிக்க வைத்தியர்கள்

தேர்தல் காலங்களில்
வாக்குறுதிகளை அள்ளி வீசி,
உதவிகேட்கப் போகும்போது
உதாசீனப்படுத்தும் அரசியல்வாதிகள்

இவர்களே எங்களது
இணையற்ற மாந்தர்கள்
மலையக சமூகத்தின்
மாபெரும் சின்னங்கள்!

தி.சுபந்தினி



## கல்லறை கட்ட

எங்களின் ஏக்கங்களை
புரிந்து கொள்ளாத சமூகமே
இனி எங்களின்
ஏவுகணைகளை ஏற்றுக்கொள்ளத்
தயாராகுங்கள்

உங்களின் தாகம் தணிக்க
எங்களை
எலுமிச்சையாய்ப் பிழிந்தது போதுமினி
எதற்கும் உதவாத உங்களின்
கல்லான இதயத்தை
தந்துவிடுங்கள்,
உங்களின் அராஜகங்களுக்கு
கல்லறை கட்ட!

பெ.சசிகலா
பொகவந்தலாவ







## இருண்ட மண்

இருளுக்குள் ஒரு தேசம்
புரள்கிறது

புல்வெளியாய், பூவனமாய்
காடுகளாய், களனிகளாய்
பரிணாமம் பற்பல
பெற்றிருந்த போதும்
'சூரியனின்' பார்வைகள்
துயர்துடைக்க வரவேயில்லை

வரண்ட வாழ்வினில்
கொழுந்துவிட்டெரியும்
துயரங்கள்...

'பொண்ணுமணி'களையும்
'தங்கவேல்'களையும் விழுங்கியே
பொன் கொழிக்கிறது இம்மண்.
முதலாளியர் கைகள்
செழிக்கின்றன
முதலானவர் வயிறுகள்
வரள்கின்றன

வாழ்வு
விரக்தியின் விஸ்ருபத்தை
தரிசிக்கிறது!

வே.சசிகலா
கெலிவத்தை

# தீக்குள் விரலை வைத்தால்...

நீ காற்றாய் இருந்தாய்
பரந்த வெளியெங்கிலும்
சுதந்திரமாய்
திரிந்ததுன் மனசு

மகிழ்வும் துயரும்
இறக்கைகளாக...
சிட்டுக்குருவியாய் வலம் வந்த
நீ ஓர் பலூனுக்குள்
சிறைப்பட்டதெப்படி?
அதுவும்
சிறகுகள் முறிக்கப்பட்டு!





சரணாலயம் தேடி
களைத்துப் போன உன்
சிறகுகளில் பட்ட
காய வடுக்கள்
காலநகர்வில் ஆறிப்போக...
நீ மீண்டும்
சுதந்திரக் காற்றை
உள்வாங்கியபடி
மனசு விரிய...
உயர உயர
பறக்கத்தான் போகிறாய்
உன் முறிந்த சிறகுகளுக்கு
ஒத்தடமிட்ட சரணாலயம்
மீண்டும் உன்
பறத்தலுக்காய் காத்திருக்கிறது

கவனம் சிட்டே!
முறிந்த சிறகுகளை
உடைத்து விடாமல்
பாதுகாப்பது உன்
ஆற்றலில் தங்கியுள்ளது

தீக்குள் ஜனனிக்கும்
பீனிக்ஸின் இனம் நீ.
பயம் தவிர்
நேர் பார்வை நோக்கு
உன் இலக்கே உயிராக
உயர்ந்து செல்
இனி முறியப்போவது
உன் சிறகுகளல்ல
சிட்டே!

பாலரஞ்சினி ஜெயபால்
மாத்தளை

# ஏழைகளின் ஓலம்

துன்பங்களில் துவண்டு
இன்பம் காண
முடியாதவர்கள் நாம்

எட்டடி வீடு
பட்டினி பஞ்சம்
அத்தனையும் தாண்டி
புத்தம் புதிதாய் வாழ்க்கை





பொதுச்சொத்ததனை
அதிகாரிகள் விற்கும் நிலை
எமக்கோ
தட்டிக்கேட்கும்
நியாயம் கிடைக்காத
அவலநிலை

ஏழைகள் நம்பியிருக்கும்
தேயிலை நிலங்கள்
ஏக்கர் கணக்கில்
ஏலம் போடாத குறையாய்
கம்பனிகளுக்கு
கணக்கு வழக்கில்லாமல்
ஒப்படைத்து விட்ட பாவிகளால்
அப்பாவி மக்களின்
ஒப்பாரி ஓலம்

வேலை நிறுத்தம்
காலை முதல் மாலை வரை
மணிக்கணக்கில் போராடி
பயனேதும் இல்லை
மாத முடிவில்
வருமானம் இன்றி
வறுமையில் குன்றி
துயரால் வாடும்
பிறவிகளாய் நாம்

என்றுதான் ஒழியும்
அதிகாரிகளின் குரூரநோக்கம்
அன்றுதான் தீரும் எம்
மக்களின் ஓலம்!

ஆர்.சரஸ்வதி

# குமுறல்கள் குடத்துள் விளக்காய்

விண்ணுலகத்தின் கீழிருக்கும்
விதி நம்மது
விறகாய் சமைந்து
வியர்த்து நின்ற வேளை
விதண்டாவாதங்கள் சபையேறின.
விரக்திகள் குடியேறின
வீதிகளில் நின்றோம்
விரைய வேண்டாம்
'விதிமுறைகள் உண்டு'
விலகியே நின்றனர்.

ஏற்றங்கள் என்றார்
எங்கே ஏற்றங்கள்?
எத்தனை மாற்றங்கள்
ஆயிரத்தில் ஒருவனாய்
அவனின் சில மாற்றங்கள்

வரட்சிக்கெதிராய் புரட்சி செய்தும்
வறுமைகள் தொலையவில்லை
அவஸ்தைகள் எம்மில் அடைக்கலம்
அதுவே எமக்கு நிரந்தரம்

வாழ்வை வேண்டி நின்ற வேளை
வாடுவது வழக்கென்றால்
அதுதான்
வானவன் வரைந்து வைத்த
வளைக்க முடியா
ரேகைகள் போலும்.

காலங்கள் கரைந்தன
கரையவில்லை கவலைகள்
புயலாய் எழுந்தோம்
தென்றலாய் மாறினோம்

கண்ட கனாக்கள் மட்டும்
நனாக்களாய் உருப்பெறாது
இதயத்தில் கனங்களாய்
கனல்களாய் மாறி
இன்னும்
எரிந்து கொண்டிருக்கின்றது
அணைக்க முடியவில்லை
ஆடுகின்றோம் நாட்டியம் மட்டும்
நடைப்பிணங்களாய்!

என்ன செய்ய
எம் குமுறல்கள் என்றும்
குடத்துள் விளக்காய்

விடியலுக்காய்
நாம் இன்னும்
காத்திருக்கிறோம்.

தினமணி தங்கையா
வெலிமடை



# நெய்தல் தையல்

தெளிந்த நீர்போல்
தெளிவான நிலாவொளி

ஆனால்
தலைவியின் முகத்திலோ
தடுமாற்றமான கலக்கம்
உள்ளமோ கலங்கித் தவிக்கிறது.

மாலைப் பொழுதினிலே
காளையவன் மீன்பிடிக்க
வேளைக்குச் சென்றிட்டான்
பேதையவளோ கலங்குகிறாள்

ஓ... காற்று வீசுகிறதே
கடலலைகள் மேலெழுமே
பெரிய மீன்களெல்லாம்
துள்ளியெழுமே





தலைவன் சென்ற படகோ
சுழன்றாடுமே...

ஆ... மின்னல் வெட்டுகிறதே
கடலிருளில் அவர்
எப்படித் தவிக்கிறாரோ
இடி வேறு முழங்குகிறதே

அவள் இதயம் தத்தளிக்கிறது...

குடிலினுள் அவளால்
இருப்புக்கொள்ள முடியவில்லை
கதவைத் திறக்கிறாள்
வெளியே எட்டிப்பார்க்கிறாள்...

அவள் கண்களை
அவளால் நம்ப முடியவில்லை
பிரமிக்கிறாள்
என்ன ஆச்சரியம்,
வெளியே
நிலவின் ஆட்சி நடக்கிறது!

காற்று... மழை... என
மனப் பிரமைக்குள் போய்
மீண்ட கதையெண்ணி
நாணுகிறாள் தனக்குள்ளே
மெல்லச் சிரிக்கிறாள்
நாளை
நலமுடன் அவர் வருவாரென
ஆறுதலை அள்ளி
பருகிக் கொள்கிறாள்!

விழி
நாவலப்பிட்டி

## நீயும் நானும்

நாமெல்லாம் துணிகளுக்காய்
பிய்த்துக் கொண்டிருக்கையில்
அம்மணமாய் ஒருவன்
அரங்கேறி விடுவான்

நீயும் நானும்
இனங்களின் மதங்களின்
பூர்வீகத்தின் பேர்களால்
அடையாளப்பட்டோம்
ஏன்...?
பூமியுள்ளவன் - பூமியற்றவன்
ஒட்டுப்பிரஜை - நாட்டுப்பிரஜை
கொள்பவன் - கொலையுறுபவன்
ஆள்பவன் - அடிமை என
மேலும் கூறுபட்டோம்





புன்னகையை உடுத்தி
பூமியை புசித்துக் கொண்டிருக்கிறோம்
உன் மனம் பற்றி
நான் அலட்டவில்லை
என்மனம் பற்றி
உனக்குக் கவலையில்லை
மனித உயிர்கள்
நமக்கு அவசியமேயில்லை

வானவில் வந்து போன
தடயமில்லாத பூமிபோல்
பூமியின் புதல்வர்கள்
மாண்டுபோன, ‘மறைந்து’ போன
நிகழ்வுகள் எமக்கு
நினைவிலில்லை
எனக்கும் உனக்கும்
மதம்
இனம்
சட்டம்
பூர்வீகம்
கட்சி
‘ஆழமாய்த்’ தெரியும் - ஆனால்
மனம்
மனிதம்
மனிஷீகம்
புரிந்துகொள்ள விரும்பா
புதிராய்...

மனிதபட்டம் சூட்டிக்கொண்டு
மிருகங்களாய்க் கூட வாழாமல்
கேவலம்!

சந்திரலேகா கிங்ஸ்லி

# புதிய தாலாட்டு

ஆராரோ ஆரிராரோ
ஆராரோ ஆரிராரோ
சேற்றில் பூத்த செந்தாமரையே
செதுக்கி வைத்த அழகு சிலையே
சீமத்தொர போல நீ இருக்காய் தங்கமே
சிவந்த வண்ணத்தில் சித்திரத் தேர்போல (ஆராரோ)

தங்கத் தொட்டில் இல்லை - என்
தங்கமே உன்னை தாலாட்ட
தூளிகட்டி நான் பாட - என்
தலைச் செல்வமே நீ அயர்வாய் (ஆராரோ)

இந்தப் பாலைவன வாழ்க்கையிலே - என்
செந்நீரை தேயிலைக்கு வியர்நீராய்
அனுதினமும் கொடுத்ததனால் - இன்று
கண்ணீர்தான் சுரக்குதடா (ஆராரோ)

குடிகார அப்பனுக்கு கொள்ளி
வைக்கப் பிறந்தாயோ? இல்லை
குலம் தழைக்க நம் இனத்தின்
விடிவெள்ளியாய்ப் பிறந்தாயோ (ஆராரோ)

அட்டைக்கடி பொறுத்து அந்த
கங்காணி கத்தல் பொறுத்து - உன்
அப்பன் உதை பொறுத்து
பொருளாதார இடி பொறுத்து - கண்ணே (ஆராரோ)

உணவு உடை தந்திடுவேன் - நல்
உயர் கல்வி தந்திடுவேன் - என் சொத்தே
நீ எனக்குத் தருவாயோ - நம்
இனத்தின் விடிவுதனை என்றென்றும்
என் கருவறைக் கூலியாய்! (ஆராரோ)

சு.உஷாநந்தினி





# மலையகச் சிறார்கள்



வீட்டுத் தொட்டிலில்
தூங்க வேண்டியவர்கள் - இன்று
பிள்ளை மடுவத் தொட்டிலில்

புத்தகம் சுமக்க
வேண்டிய கைகள் - இன்று
பிள்ளை குட்டிகளை
கூலிக்கு சுமந்து கொண்டு

அறிவுக் கட்டுக்களை
சுமக்க வேண்டிய தலை - இன்று
விறகுக் கட்டுக்களின்
சுமையோடு

பேனாவுடன் விளையாட
வேண்டிய விரல்கள் - இன்று
பிறவீட்டுப் பாத்திரங்களுடன்

சீருடை அணிந்து
பாடசாலை செல்ல வேண்டியவர்க
அழுக்குடை அணிந்து
அன்றாடக் கூலிக்கு

ஓ...! இந்நிலை
மலையகத்துக்கு இன்று
மட்டும் தானா?
என்றுமா...?

கு.விஜிதா

# உயிர்

மலையகம் எங்கும்
பச்சை வர்ணஜாலம்
வசந்தம் பாடி நிற்கிறது

வாழ்வுப் பயணங்களை
இனிதாக்க
நிமிர்ந்து நிற்கிறது
தேயிலை

தேயிலையை வாழவைக்க
நாங்கள் வாடி
நிற்கின்றோம் நிர்க்கதியாய்





நிலவு
தேய்பிறையாகத் தேய்ந்து
பௌர்ணமியாய் முழுமைபெறுகிறது
நாங்களோ
அமாவாசையாகவே
வாழ்கின்றோம்.

அட்டையோ
இரத்தத்தை உறிஞ்ச
அரசோ
உயிரைக் குடிக்கிறது

எங்களின் உயிர் என்ன
உதைபந்தா?

எங்கள் தேயிலைக்கு
உலக சந்தையில்
உயர்ந்த விலை
நாங்களோ
சமூகத்தில் தாழ்ந்த நிலையில்

நெடும் வழியைக் கடக்க
குறுக்குப் பாதையை
பயன்படுத்துகின்றோம்
அரசோ
எம்மை ஏமாற்ற எம்
பிரதிநிதிகளையே பயன்படுத்துகின்றது

தேயிலைக்காக வாழ்ந்த நாங்கள்
வாழ்க்கைக்காக
வாழ்வோமா இனி?

ரா ஸ்ரீபிரியா

## சமனற்ற சட்டங்கள்

பெண்ணாகப் பிறந்தால்
அடிமை,
ஆணாகப் பிறந்தால்
அதிகாரம்.
பொய்யான சட்டம்
என்றும்
ஆணை உயர்த்தியே
வைக்கும்,
பெண்ணை தாழ்த்தியே
கூறும்.
சட்டங்களை இயற்றியது
ஆண்களே
அதனால் சட்டங்கள் சார்பானது
ஆணினத்துக்கே
சமனற்ற சட்டத்தை
கிழித்தெறிந்தால்
விடியலன்றோ
பெண்ணினத்துக்கு!

யோகேஸ்வரி கிருஸ்ணன்
கண்டி





## விடை தேடும் வினாக்கள்

மலை முகடுகளுக்குள்
மறைந்து போனது
எங்கள் சோகச்சுமை

எட்டி எட்டி உதைத்தாலும்
எதையும் தாங்கும்
உதைபந்து நாங்கள்
கூடையைத் தூக்கித் தூக்கி
கூனிப்போனது
எங்கள் வாழ்க்கை

சந்தாப் பணம்
சேகரிக்க மட்டும்
சங்கங்கள்

வாக்கு
வாங்க மட்டும்
கட்சிகள்

எல்லாம் முடிந்த பின்னே
ஏனென்று கேட்க ஆளில்லை
எட்டி உதைப்பார்
எங்களை

நாங்கள்
விடியல் எனும்
விடையைத் தேடும்
வினாக்களாய்..!

இரா.வனிதா

# தாமரையே மூழ்கும் கண்ணீர்

அதோ...
அழுகிறாள் ஒரு யுவதி
பறந்து சென்ற அவளோ
இன்று
வெறுமையாய்
திரும்பி வந்தாள்
பட்டினிக்கோரம் போக்கி
பசுமை சோலையாக்க
வேலைக்காய்
வெளிநாடு சென்ற அவள்
திரும்பினாள் வெறுமையாய்

பிறந்த இடத்தில்தான்
இடர்கள் தொடர்ந்தாலும்
புலர்ந்த இடத்திலுமா
பம்பர் வந்து தாக்க வேண்டும்

தம்பியவன் படிக்க
தங்கையோ மணமுடிக்க
தந்தை மதுவில் குளிக்க
தாயாரோ கண்ணீரில்
துடிக்கிறாள்...

இத்தனையும் இவள் தலையிலே
சுமையாய் கனக்க
மூழ்கிப் போனாள்
வேதனையால் - இது
தாமரை இலைத் தண்ணீரா...
இல்லை





தாமரையே மூழ்கும் கண்ணீரா?
பட்ட கடன் தீருமென
பாவையவளின் கனவு
லெபனானிலே துவள்கிறது
பட்டவை மட்டுமா
பறப்பதற்காய்
பெற்றவை வேறு
கடனனைத்தும் பறந்திடுமா?
கடமைகள் தவிர்ந்து
கவலைகள் தான் தீர்ந்திடுமா?

அங்கே
அவள் அழுகிறாள்
கதறுகிறாள்

நான் திமிறி
எழுதுகின்றேன்
என்னை எறியாதீர் மீண்டும்
வறுமையின்
வெறுமையின்
அகோரப்பிடிக்குள்.
சிதைக்காதீர்
என்
நம்பிக்கைதனை
தாமரை மூழ்கும்
தண்ணீராய்...
தாமரையாய்..!

இரா. வனிதா

# எங்கள் எம்.பி

எங்கள் எம்பீ மிகவும்
நல்லவர்
சபை நாயகருக்கு பிரியமான
உறுப்பினர்
ஆரவாரத்தால் அவைச் சுவடுகள்
ஆடினாலும்
அசையாமல் இருக்கும்
அற்புத மனிதர்
எதிர்க்கட்சிகளிடை கருத்து மோதல்கள்
தோன்றினாலும்
கண்டு கொள்ளாதவர்
ஆசனத்தில் அமர்ந்திருக்கும்
அமைதிச் சின்னம்
நாற்காலியை விட்டு நகர்ந்து
நாவினால் ஒரு வார்த்தை நல்கினால்





வம்பு வந்து விடுமென - தன்
அறிமுக கன்னி உரையைத் தவிர
வேறெந்த வாதத்திலும் பங்கு
கொள்ளாத கொள்கைவாதி
எங்கள் எம்பி மிகவும் நல்லவர்.

ஆளும் கட்சியினால்
பிரதமருக்கு நாணயமான
நட்சத்திரம்
மந்திரிசபை பாரம்பரியத்தை மதித்து
எந்தத் தீர்மானத்தையும்
மறுக்காமல் ஏற்கும்
ஜனநாயகவாதி அவர்.

எதிர்க்கட்சியானாலும்
எதிர்த்துப் பேச மாட்டார்
ஆளும் கட்சியில் அமர
அழைப்பு வந்தால்
அன்புடன் ஏற்றுக்கொள்வார்,
நாட்டு நலனுக்காக.
எங்கள் எம்பி மிகவும் நல்லவர்.

மக்களின் துன்பங்களைக் கண்டு
துவழமாட்டார்
வேதனைகளில் வெகுண்டெழவும்
மாட்டார்
தனது பாதையில் எதையும்
அலட்சியமின்றி
அவமானங்களையும் ஆறுதலாய்
ஆத்திரமின்றி
ஏற்றுக்கொள்ளும் புதுமைப் பிறவி
எங்கள் எம்.பி மிகவும் நல்லவர்!!

ரா.கெத்தரீன்

## சுனாமியின் சீற்றம்

வழமையான காலையை
வரவேற்றுக் காத்திருக்க
துயிலெழுந்தோர் சிலர்
தூங்கியோர் சிலர்
தாயின் மார்போடு கொஞ்சிய
குழந்தைகள் பலர்
மகனுக்காய் தாய்
கணவனுக்காய் மனைவி
சகோதரனுக்காய் சகோதரி





அண்ணனுக்காய் தம்பி
காதலனுக்காய் காதலி
காத்திருந்தோர் பலர்

கடலலையோ
காலனாய் மாறி
கரைத்துப் போயிற்று
கணப்பொழுதில்.
நிகழ்காலக் நினைவு
எதிர்காலக் கனவு
எல்லாமே
சுனாமியால் செத்துப்போயிற்று

அடுக்கடுக்காய்
ஆயிரம் உடல்.
மணற்றரை இன்று
மயான பூமியாய்...
கருவாடு காயுமிடத்தே
இன்று
பிணங்களின் மாநாடு
விளக்கு வைக்கும்
கோவில்களில்
வெறுமனே சிலை மட்டும்.

மனித இனம்
மாய்ந்து போய்
ஊரெங்கும் மரணஓலம்
விண்ணை முட்டும்.
துயர் தீரும் காலமின்னும்
தூரத்தில் தானோ..?

க.நளாயினி

## ரயில் அனுபவம்

மரத்தில் கவிந்த இருளை
கலைக்க முயற்சிக்கும்
மின்மினியாய் என் மனசு
எருமையின் முதுகில்
எண்ணி எண்ணி
உண்ணி பொறுக்கும்
மைனாவாய் சிலநேரம்

காண்கிறேன்
அண்மிக்கத் தோன்றாத
அதிநாகரீக வாசிகள்...
புத்தக வயதில்
புது சிசுவை
அணைத்து நிற்கும் குழந்தைத்தாய்...
தனக்காய் இல்லை
பிறருக்காய் மூட்டை சுமக்கும்
பெரியவர்...

காற்றெம்மை கவனிக்கவில்லை
வாடிய பயிராய் என் தோழி
கற்பனைப் பையுடன்
தட்டேந்திய கவிஞன்
கவி புனையத் தோன்றவில்லை - என்
பேனை மூடிக்கொண்டது முகத்தை

நகரும் கணங்களில்
நகரும் காட்சிகள்
இறங்காத ரெயில் பயணியாய் வாழ்க்கை!

ஆர்த்தி
கொட்டக்கலை





## பெண் நிலை



அவர்கள்
பேசிக் கொண்டிருக்கிறார்கள்
வார்த்தைகள் அருமை
கவித்துவம்
பெருமை கொள்கிறது.

அடுப்படி அவலங்கள்
அப்பட்டமாய்
கண்களில் வழிய

பாராளுமன்றம் தொடங்கி
பட்டிமன்றம் வரையில்
பேசப்படுகிறாள்

அகிலத்தை ஆட்டுவிக்கும்
அற்புதப் பெண்ணாம்
அனைத்தும் அவளுள் அடங்குமாம்

கரகோசம் காதடைக்க
கேட்போர் செவியை
சிரச்சேதம் செய்தார்

தேர்விட்டு இறங்கும்
தெய்வம் போல்
மேடை விட்டு இறங்கினார்
மாமனிதர்

அன்று மாலை...
கேட்ட போதில்
தேனீர் வரவில்லையென
கன்னம் பழுத்தது
வேலைக்காரப் பெண்ணுக்கு!

பி.ஜேசுராணி

# பதிப்புரை

ஊடறு மூலமாக மலையகப் பெண் படைப்பாளிகளின் கவிதைகளை தொகுப்பாகக் கொண்டுவருவதில் நாம் மகிழ்ச்சியடை கின்றோம். மலையக சமூகத்தின் வாழ்வியல் எதிர்நோக்கும் அடக்குமுறைகள் நிறுவனமயப்பட்ட நிலையில், பெண்கள் இதற்குள்ளும் ஆணாதிக்க முறைமைக்குள்ளும் நசுங்கிக் கொண்டிருக்கின்றனர். பொருளாதாரம், அரசியல், கல்வி, சுகாதார வசதிகள், சமூக நலவாழ்வு போன்ற அடிப்படை மனித உரிமைகளைக் கூட வழங்காமல் பல்லாண்டு காலமாக மோசமான அடக்குமுறைக்குள் வைத்திருக்கிறது இலங்கை அரசு. உலகின் மிகப்பெரும் தேயிலை ஏற்றுமதி நாடாக இலங்கையை பச்சைகுத்திக் காட்டும் மலையகத்தின் வாழ்நிலை அடிப்படை வசதிகூட இல்லாமலாக்கப்பட்டு உதாசீனப்படுத்தப்படுவதை மிகப்பெரும் தேசிய வெட்கக்கேடாகக் கொள்ளமுடியும். அதேபோல் கருத்தியல் ரீதியில் 'தோட்டக்காட்டான்' என இழிவுபடுத்தும் யாழ்மேலாதிக்கச் சுட்டல் இன்னொரு வெட்கக்கேடாகும்.

மலையக தமிழ்த் தேசமும் தனக்கான குறிப்பான அரசியல் பண்புகளையும் குறியீடுகளையும் கொண்டுள்ளது. அவர்களின் உள்ளக்குமுறல்களை, உணர்வுகளை அவர்களுக்கேயான மொழியில் கவிதையாக வெளிக்கொணர்ந்துள்ளனர் இக் கவிஞைகள். பொதுவாக கவிதைகளின் பாடுபொருள் சமூகப்பிரச்சினைகள் சார்ந்தும், அரசியல், பொருளாதாரம் சார்ந்துமே படைக்கப்பட்டுள்ளன. அன்றாட வாழ்வுக்கே அல்லாடும் ஒரு சமூகத்தில் பெண்ணியப் பார்வை அரிதாகக் காணப்படுவதை நாம் புரிந்துகொண்டுதான் ஆகவேண்டும். இவர்களுக்குக் கிடைக்கப்பெற்ற இலக்கியத்தளமும்கூட நாட்டின் மற்றைய பகுதிகளில் வாய்க்கப்பெற்றதைப் போல் பரந்து விரிந்ததல்ல. வசதிவாய்ப்புக் கொண்டதல்ல. இந்நிலையில் இவர்களின் கவிதைகள் - தரமானவை அல்லது தரமற்றவை என்ற அறியப்பட்ட அளவுகோல்களைப் புறந்தள்ளி - தம் உணர்வுகளைப்பேச முயல்கின்றன. இவையே இசைபிழியப்பட்ட வீணையாக வெளிவந்துள்ளது. இத் தொகுப்பு மலையகப் படைப்பாளிகளிடம் படைப்பின்மீதான வேட்கையை உண்டுபண்ணுமெனில் அதுவே இத் தொகுப்பிற்குக் கிடைக்கும் வெற்றி. அதற்கு ஊடறு உறுதுணையாக நிற்கும்.

**தொகுப்பாளர்கள்**

01.09.2007 **றஞ்சி**(சுவிஸ்) **தேவா**(ஜேர்மனி)

இத்தொகுப்பில் 47 பெண்படைப்பாளிகளின் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இக் கவிதைகள் மலையகத்திலிருந்து வெளிவந்த பல சஞ்சிகைகளிருந்து எடுக்கப்பட்டுள்ளன. நாம் கேட்டதுமே அதை மறுக்காது இக் கவிதைகளை தேடியெடுத்து இத் தொகுப்புக்காக எமக்கு அனுப்பித்தந்த வே.தினகரனுக்கும், மலையகத்தொடர்புகளை ஏற்படுத்தித் தந்த என்.ஆத்மாவுக்கும், மலையகத்தில் எடுக்கப்பட்ட பல புகைப்படங்களை எமக்கு தந்து உதவிய குட்டிரேவதி, ஸ்டெலா விக்டர், தேவஅதிரன், சிவக்குமார், சோமிதரனுக்கும், வழமைபோன்றே உதவிகளும் ஆலோசனைகளும் தந்து உற்சாகப்படுத்திக் கொண்டிருக்கும் விடியல் சிவாவுக்கும், ஆழியாளுக்கும், இந் நூலை உருவாக்குவதில் அதிக சிரமம் எடுத்துக்கொண்ட ஜோதி என்ரபிரைஸினருக்கும் எமது நன்றிகள்.

'இசைபிழியப்பட்ட வீணை' என்பது நிரஞ்சலா (கட்டபுலா) என்ற படைப்பாளியின் கவிதைத் தலைப்பு. தொலைந்துபோன இக் கவிதையை மீண்டும் பெறமுடியாத நிலையில் அதன் தலைப்பு தொகுப்பிற்குப் பொருத்தமான தலைப்பாகிவிட்டது. நிரஞ்சலாவுக்கும் எமது நன்றிகள்.